13 AUG 1999
மாநகராட்சி மன்றம்


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 28 வெள்ளிக்கிழமை [13-08-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 223


# கிழக்கில் பெரும் நடவடிக்கைக்கு இராணுவத்தினர் தயாராகின்றனர்

## புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்ததன் விளைவு

மட்டக்களப்பு, ஒகஸ்ட் 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளதை அடுத்து, அவற்றை முறியடிக்கும் நோக்கத்துடன் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள படையினர் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

இந்த நடவடிக்கைக்காக விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்கு சமீபமாக வாகரைப் பகுதியில் துருப்புக்கள் குவிக்கப்பட்டுவருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நகருக்கு வெளியே பெரிய நிலப்பரப்பில் நிலை கொண்டுள்ள விடுதலைப் புலிகள் படையினருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கடந்த சில வாரங்களாகத் தாக்குதல்களைத் தீவிரமாக்கியுள்ளனர்.

தேசிய துணைப்படைப் பொறுப்பாளர் மீது நடத்தப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர்களின் கூட்டு பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக. 13

தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து மக்கள் அமைதியாக வாழ தெய்வாசி வேண்டி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வெள்ளிக்கிழமைகளில் மேற்கொள்ளவிருக்கும் கூட்டுப் பிரார்த்தனை இன்று ஆரம்பமாகவிருக்கின்றது.

பிற்பகல் 5-00 மணி முதல் 6-00 மணி வரை இந்தப் பிரார்த்தனை இடம்பெறும்.

இந்தப் பிரார்த்தனையில் சகல மாணவர்களையும் பங்குகொள்ளுமாறுபல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

பிரதி வெள்ளிக்கிழமைகளில் இந்தக் கூட்டுப்பிரார்த்தனை தொடர்ந்து நடைபெறும் என்று மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## சாரம் அணிந்து செல்ல மீனவருக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 13

பாஷையூர், குருநகர் பகுதி மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும்போது சாரம்அணிந்தும் செல்லலாம் என்று பலாலி படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கடற்றொழிலுக்குச் செல்லும் போது சாரம் அணிவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை இன்று முதல் நீக்கப்படுகிறது.

இது விடயமாக மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு 51 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மாரம்பே இன்று விளக்கம் அளிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கரையில் இருந்து 3 கிலோ மீற்றர் தூரம் மட்டும் மீன் பிடிக்க இருந்துவரும் கட்டுப்பாட்டை கடற்றொழிலாளர்கள் கண்டிப்பாகக் கடைப் பிடிக்கவேண்டும் என்றும் — படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

(இ-3)

## லிப்டன் சதுக்கத்தில் நேற்று இரு ஆர்ப்பாட்டப் பேரணிகள்

கொழும்பு, ஓக. 13

யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்னெடுக்கவேண்டும் என்று கோரி லிப்டன் சதுக்கத்தில் எதிரும் புதிருமாக இரு ஆர்ப்பாட்டப் பேரணிகள் நேற்று நடத்தப்பட்டன.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை நாடாளுமன்றத்தில் முன்வைத்து யுத்தத்துக்கு முடிவு காணவேண்டும் என்றும்—

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டும் என்றும்—கோரி லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள்கட்சி ஆகியன இணைந்து லிப்டன் சதுக்கத்தில் நண்பகல் 12-30

(10 ஆம் பககம் பார்க்க)

## லயன் ஏயர் விமான தடயப்பொருள் யாழ். நகரிலும் மக்கள் பார்வைக்கு!

### செப். 7 முதல் வைக்கப்பட்டிருக்கும்

மன்னார், ஓக. 13

கடந்த வருடம் இரணைதீவுக்கடற் பகுதியில் காணாமற்போன '' லயன் ஏயர் '' விமானத்தில் இருந்து மீட்கப்பட்ட தடயப் பொருள்கள் அடுத்தமாதம் 7 ஆம் திகதி முதல் மூன்று நாள்கள் மக்கள் பார்வைக்காக யாழ்.பொலீஸ் நிலையத்தில் வைக்கப்படவிருக்கின்றன.

இதுதொடர்பாக மன்னார் பொலீஸார் தாக்கல் செய்த மனுவை மன்னார் மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் ஏற்று உத்தரவு வழங்கி உள்ளார்.

விமானத்தில் பயணம்செய்தவர்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் தடயப் பொருள்களை யாழ்ப்பாணத்திலும் வைக்க அனுமதிக்கவேண்டும் என்று பொலீஸார் தமது மனுவில் கோரி இருந்தனர்.

செம்மணிப் புதைகுழி தோண்டும் பணி அந்தக் காலப்பகுதியில் இடம்பெறுவதால் அச்சமயத்தில்தான் யாழ்ப்பாணத்தில் தங்கவிருப்பதாகவும்—

[10 ஆம் பக்கம் பார்க்க]

## நாடாளுமன்றத்துக்கு பின்புறப் பகுதியில் குண்டு

### செயல் இழக்க வைக்கப்பட்டது

கொழும்பு, ஓக. 13

கோட்டேயில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்துக்குப் பின்புறத்தில் இருந்து நேற்று மாலை 5 மணி அளவில் வெடிகுண்டுப் பார்சல் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

நாடாளுமன்றக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் பிரிவினர் இதனைக் கண்டெடுத்தனர்.

குண்டு வெடிக்கவைக்கும் படையினர் அழைக்கப்பட்டுக் குண்டுப்பார்சல் வெடிக்க வைக்கப்பட்டது. (இ-3)

## ஹெல்மட் அணிவதற்கு தடை இல்லை

யாழ்ப்பாணம், ஓக. 13

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்பவர்கள் தமது பாதுகாப்புக்காக ஹெல்மட் அணியலாம். ஆனால் அவர்களை அடையாளம் காண வசதியாக அவர்கள் முகத்தை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் - திருகோணமலை

## பயணிகள் சேவைக்கு புதிய கப்பல் கட்டப்படும்

யாழ்ப்பாணம், ஓக. 13

திருகோணமலைக்கும்—காங்கேசன்துறைக்கும் இடையில் எதிர்வரும் ஜனவரி முதல் பயணிகள் கப்பல் சேவை நடத்தப்பட உள்ளது இதற்கு முன்னோடியாக கடலின் தன்மையைப் பொறுத்து புதிய கப்பல் ஒன்று கட்டப்படவிருக்கின்றது.

வட மாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிளித்தார்.

முந்நூறு பேர் பயணம் செய்ய வசதியாக கட்டப்படவுள்ள இந்தக் கப்பல் வடக்கு கடலின் ஆழம், தூரம் போன்றவற்றுக்கு ஏற்றவகையில் அமையும் என்றும்—

இந்தக் கப்பலைப் பெறுவதற்கான உத்தரவை அரசாங்கம் கப்பல் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கியுள்ளது என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார்.

சிங்கப்பூர் அல்லது சுவீடன் நாட்டில் இருந்து இந்தக் கப்பல் பெறப்படும் என்றும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர் தொடர்பான பணிகளை இடைநிறுத்த உத்தரவு

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நடத்தப்படவிருந்த நேர்முகப்பரீட்சை தொடர்பான பணிகளை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தும்படி மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளர் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களின் விவரங்களை பெறும் வகையில் நேர்முகப்பரீட்சை நடத்தும்படியும் —

நேர்முகப் பரீட்சை நடத்தி விவரங்களை விரைவாக அனுப்பும்படி கோரியும் — மாகாணக் கல்வியமைச்சு

[10 ஆம் பக்கம் பார்க்க]

## ஜெனீவா உடன்படிக்கையின் நிறைவு செஞ். அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 13

போரினால் பாதிக்கப்பட்டோரின் மனிதாபிமான உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஜெனீவா உடன்படிக்கையின் 50 ஆவது ஆண்டு நிறைவு தினமான நேற்று அதையொட்டி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்தில் விசேட நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

குடாநாட்டில் உள்ள திணைக்களத் தலைவர்கள் சமயத் தலைவர்கள், சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாணவர் அமைப்புப் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

கொடியேற்றம் மற்றும் சமய நிகழ்வுகளும் இடம் பெற்றன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வன்னி அலுவலகங்கள் உட்பட சகல இடங்களிலும் இது தொடர்பான நிகழ்வுகள் இடம்பெற்றன.

(இ-3-6)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SUBRA**

சித்தன்கேணி

இரசாயனவியல்
2001 A/L
3.30 — 5.00 Sat, Sun

பொதுஇரசாயனம்
2000 A/L
5.00 — 6.30 Sat, Sun

சேதன இரசாயனம்
திரு. எட்வேட்

2000 A/L மாணவர்களே
இந்துநாகரிகம்
பகுதி I (புதிய பிரிவு)
அமைப்புமுறை வினா
புதன் 3.30 — 6.30
திரு. T. ஸ்ரீஸ்

உயிரியல்
2000, 2001 A/L
உங்கள் ஆசிரியர்
புதன் — வெள்ளி 3.30

(68167)


## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக. 13

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றுவரும் இலங்கை அதிபர் சேவை தரம் III, II, I க்கு ஆள்சேர்ப்பதற்கான பரீட்சைக்குரிய வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 15 ஆம், 22 ஆம், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் காலை 10.00 மணி முதல் நடைபெறும் என்று சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்தார். (இ–3)


புலமைப் பரிசில்
2000

பயிற்சிப் பரீட்சை–01
ஞாயிறு காலை
(15-08-99) நடைபெறும்.
பரீட்சைப் பகுதி,
BOND

(68176)


## பொதுசன உதவிப்பணம்

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்குரிய ஜூலை மாதத்துக்கான கொடுப்பனவுப் பட்டியல்கள் சம்பந்தப்பட்ட தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள் தத்தமது தபாலகங்களில் சென்று உடனடியாக பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு வலிகாமம் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். ஆர். ஜெயப்பிரகாசம் அறிவித்துள்ளார்.

## பனையால் விழுந்து மரணம்

கள்சீவுவதற்காகபனைமரத்தில் ஏறியவர் தவறி விழுந்து மரணமானார்.

இணுவில் கிழக்கில் இரு நாள்களுக்குமுன் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மு. செல்வராசா (34வயது)என்பவரே உயிரிழந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட சிலமணி நேரத்தில் மரணமானார்.

மரண விசாரணையை அடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

## கவியரங்கம்

யாழ்ப்பாணம், ஒக. 13

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் வழங்கும் இலக்கிய அரங்குஎதிர்வரும்ஞாயிறன்று மாலை 3. 30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளச்சந்தியில் அமைந்துள்ள ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும்

'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்' என்றதலைப்பில் கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி தலைமையில் கவியரங்கம் இடம்பெறும். (இ-3-ரீ)


விக்னா
கல்வி நிறுவனம்
அளவையியல்
திரு. சயந்தன்
2000 பகுதி II
(காலை 8 மணி)
2001 பாரம்பரிய
அளவையியல்
(11 மணி)
ஆரம்பம்: 14-08-1999
(68168)



ஸ்ரீசெல்வா மினி
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
முரளி – சிம்ரான்
நடித்த
கனவே கலையாதே
(புதிய வெளியீடு)
10-30, 2-30
அடுத்த வெளியீடு!
மலபார் போலீஸ்
(சி/8505)


## விளையாட்டு விழா

வலி. தென்மேற்கு, ஒக. 13

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1. 30 மணியளவில் இடம் பெறும்.

சனசமூகநிலையத்தலைவர் சி. வீ. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஸ்ணசாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (இ–185–90)


அச்சுக் கோப்பாளர் தேவை

அனுபவமுள்ள ஆண், பெண்
அச்சுக்கோப்பாளர்கள் தேவை.
ஞாயிறு காலை 10 மணிக்கு நேரில் வரவும்.
சரவணாஸ் அச்சகம்
இல. 233, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(68170) (சத்திரத்துச் சந்தி அருகில்)



லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று
அஜித், பிரசாந்த்,
தேவயானி
நடித்த
கல்லூரி வாசல்
நேரம்; 10-30, 2–30
(68097)


## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிராசா அரியம்மா

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா அரியம்மா 99– 8– 11 அன்று மாலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி லீலாவதியின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், அரியராசா (முன்னாள் துர்க்கா அச்சகம், உடுவில்),பேரின்பராசா(கொக்கோ) பிறேமராஜா (கனடா), புஸ்பமாலா, ஜெயந்திராஜா (கனடா),சுகந்தமாலா ஆகியோரின் அன்புத்தாயாரும் வனஜா, சாந்தி, கருணானந்தசோதி (படப்பிடிப்பாளர்), செல்வி, விஜயசேகர் (சிமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும், விதுஷன், துளஸ்யா, பிறேமிகா, சிந்திகா, மிதுனன், பர்மியா, கிருஷிகன், நிரூஷன், நீலா, மஹீஷினன், சபேஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், மகேஸ்வரி, மகேந்திரா, பாலேந்திரா, தெய்வேந்திரா, யோகேஸ்வரி காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் புஸ்பவதி, கமலாவதி,ராஜேந்திரா, புவனேந்திரா, கஜேந்திரா, சரஸ்வதி, திலகவதி ஆகியோரின் அன்பு அக்காவும், காலஞ்சென்ற நல்லம்மா, ராசரத்தினம் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கா. கருணானந்தசோதி
(மருமகன்)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(68178)


நாகம்ஸ்
சுன்னாகம்
கார்த்திக், நக்மா,
கவுண்டமணி நடித்த
மேட்டுக்குடி
காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
[68173]



ராஜா
யாழ்ப்பாணம்
இன்று முதல்
பிரசாந்த் – ஐஸ்வர்யா
நாசர் நடித்த
ஜீன்ஸ்
10-30, 2–30
(சி/8466)


## மிருதங்கம் வழங்குவதற்கான கேள்விப்பத்திர அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழகத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் மிருதங்கங்கள் செய்து வழங்குவதற்குத் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| மிருதங்கம் | அளவு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. எச்சு சுருதி | 22'' | 20 |
| 2. தக்கு சுருதி | 24'' | 01 |
| 3. தக்கு (வாத்தியம்) | 23'' | 01 |
| 4. எச்சு சுருதி | 21'' | 03 |
| | | 25 |

கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படும் போது இவற்றை வழங்க தேவைப்படும் கால எல்லை குறிப்பிடப்படல் வேண்டும்.கேள்விப்பத்திரங்கள் நிதியாளர், யாழ்/பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற விலாசத்திற்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம். கடித உறையின் மேற் பக்க மூலையில் ''மிருதங்கம் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 25—08—1999 பி. ப. 2-00 மணி. விண்ணப்பங்கள் அன்றையதினம் 2–30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்கள் கேள்விப் பத்திரங்களைத் திறக்கும் நேரத்தில் சமுகமளிக்கலாம்.

– பதிவாளர்,
யாழ்/பல்கலைக்கழகம்.

(சி/8502)


மிற்சுயி (MITSUI), அட்லஸ் (ATLAS)

சிமெந்து விற்பனை

ரோக்கியோ சிமெந்து கம்பனியின் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மிற்சுயி அட்லஸ் சிமெந்துகள் சில தினங்களில் விற்பனைக்கு வருகின்றது.

ஓடர்களை முற்பதிவு செய்து கொள்ளுங்கள். இவை அனைத்தும் உற்பத்தி செய்யப்பட்ட சில தினங்களிலேயே இங்கு விற்பனைக்கு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு: யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கோ அல்லது கொழும்பிற்கோ புகையிலை, உலர்ந்த கடல் உணவுப் பொருள்கள் மற்றும் பனை உற்பத்திப் பொருள்கள் என்பவற்றை அனுப்ப விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

ஜெசிபா ஏஜென்சி

132, ஸ்ரான்லி வீதி, (சி/8503) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எச்சரிக்கையை மீறியதனாலேயே பாக். விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

## இந்திய விமானப் படை தளபதி தெரிவிப்பு

புதுடில்லி, ஒக. 13

கட்டுப்பாட்டு எல்லையை மீறி இந்தியப் பகுதிக்குள் பறந்துகொண்டிருந்த பாகிஸ்தான் விமானத்தை தரை இறக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு விமானி கட்டுப்படாததனாலேயே அது சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்திய விமானப் படைத் தளபதி எயார் சீவ் மார்ஷல் ஏ. வை. டிக்மிஷ் இவ்வாறு தெரிவித்தார் —

கடந்த புதன்கிழமை குஜராத் மாநிலத்தின் சஜ் பகுதியில் வைத்து இந்திய விமானப் படை விமானத்தால் சுட்டு வீழ்த்தப்பட்ட பாகிஸ்தான் கடற்படை விமானம் குறித்து செய்தியாளர்களிடம் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது —

இந்திய விமானப்படையின் 'மிக் — 21' ரக போர் விமானங்கள் பாகிஸ்தான்விமானத்துடன் தொடர்பு கொள்ள முயற்சித்த போது அதனை பாகிஸ்தான் விமானிகள் தடுத்ததுடன் எச்சரிக்கைகளைமீறித்தொடர்ந்து எமது பகுதிக்குள் விமானம் பறந்து கொண்டிருந்தது.

சட்டப்படி இந்திய விமானிகள் பாகிஸ்தான் விமானத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவை எதுவும் இல்லை.

அதி நவீன ஆயுதங்களை எடுத்துச் செல்லக் கூடியஅந்த விமானம் எச்சரிக்கைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் இந்தியப் படை விமானங்களை இலக்கு வைத்து பறந்தது. எனவே அது சுட்டு வீழ்த்தப்பட்டது.

அந்த விமானம் வழிதவறி இந்தியப்பகுதிக்குள் நுழைந்ததாகக் கூற முடியாது. ஏனெனில், அது அதி நவீன தயாரிப்பான அட்லாண்டிக் விமானம்.

விமானம் பயிற்சிக்காக பறந்து கொண்டிருந்தது என்று பாகிஸ்தான் கூறுவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

## சியாச்சினில் இந்திய நிலையை கைப்பற்ற பாகிஸ்தான் முயற்சி

### இந்தியா குற்றச்சாட்டு

புதுடில்லி, ஒக. 13

இந்தியாவின் சியாச்சின் பனிமலைப் பகுதியில் உள்ள இந்திய படையினரின் எல்லைக்காவல் நிலையம் ஒன்றைக் கைப்பற்ற பாகிஸ்தான் இராணுவம் நடத்திய முயற்சியை தாம் முறியடித்துள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

மேகமூட்டங்கள் சூழ்ந்து தெளிவற்றுக் காணப்பட்ட பனிமலையின் காலநிலையைப் பயன்படுத்தி சியாச்சினின் வடக்குப் பகுதியில் இருந்த எல்லைக்காவல் நிலையத்தை கைப்பற்ற பாகிஸ்தான் படையினர் முயன்றனர் என்றும் —

அந்த முயற்சியை இந்தியப் படையினர் பதில் தாக்குதல் நடத்தி முறியடித்தனர் என்றும் —

அந்தத் தாக்குதலில் இரு பாகிஸ்தான் படையினர் உயிரிழந்தனர் என்றும் —

சிறிது நேரத்தின் பின்னர் பாகிஸ்தான் படையினர அதே காவல் நிலையத்தை கைப்பற்ற மீண்டும் முயற்சி செய்த போது இந்தியப் படையினர் நடத்திய தாக்குதலில் மூன்று பாகிஸ்தான் படையினர் பலியானதாகவும் —

இந்தியா அறிவித்துள்ளது.

## வேட்பு மனுக்கள் தாக்கல்

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள இந்திய பொதுத் தேர்தல்களில் போட்டியிடுவோர் வேட்புமனுத் தாக்கல் செய்வது நேற்று முன்தினம் காலை ஆரம்பமானது.

524ஆசனங்களைக்கொண்ட இந்திய நாடளுமன்றில் 146 ஆசனங்களுக்கான முதல் கட்டவாக்களிப்பு நடைபெற உள்ளது. இந்த 146 தொகுதிகளுக்கான வேட்புமனுக்களைத்தாக்கல் செய்யும் பணிகளே நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளன.

தமிழ் நாடு, ஒரிசா, கர்நாடகா, மஹாராஷ்டிரா, கோவா, ராஜஸ்தான், ஆந்திரப்பிரதேசம். குஜராத், ஹரியான, பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களிலும் பெரும்பாலான யூனியன் பிரதேசங்களிலும் முதற்கட்ட வாக்களிப்பு நடைபெறும்.

## லட்சக் கணக்கானோர் கிரகணம் பார்த்தனர்

லண்டன், ஒக. 13

இந்த நூற்றாண்டின் இறுதி சூரிய கிரகணம் நேற்று முன் தினம் நிகழ்ந்தது.

உலகம் முழுவதிலும் இருந்து லட்சக் கணக்கான மக்கள் நேரடியாகவும் கோடிக்கணக்கானோர் தொலைக்காட்சி மூலமும் சூரிய கிரகணத்தைக் கண்டு களித்தனர்.

அட்லான்ரிக் கடலின் மேல் ஆரம்பித்த சூரிய கிரகணம் 2ஆயிரத்து 400 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து வங்கக் கடலின் மேல் மறைந்தது. சுமார் 3 மணி நேரம் இந்தக் கிரகணம் நீடித்தது.

லண்டனுக்குத் தென் மேற்கில் உள்ள ஸ்ரானியோ தீவுகளில் நேற்று முன்தினம் நண்பகல் வேளை சூரிய கிரகணத்தால் இருள் சூழ்ந்தது.

சூரிய கிரகணத்தைக் காண்பதற்காக மக்கள் வீதிகளிலும் பொது இடங்களிலும் ஆயிரக்கணக்கில் கூடியதால் பாரிஸில் போக்குவரத்துகள் ஸ்தம்பித்தன. அலுவலகங்களும் செயலிழந்தன. [ஐ—6]

## 3 சிறுவர் உட்பட ஐவர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

### அமெரிக்காவில் சம்பவம்

வாஷிங்ரன், ஒக. 13

அமெரிக்காவில் நேற்று முன் தினம் ஒருவர் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் மூன்று சிறுவர்கள் உட்பட 5 பேர் காயமடைந்தனர்.

லொஸ் ஏஞ்சலில் யூதர்களுக்குச் சொந்தமான இடத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவரை பாதுகாப்புப் படையினர் தேடி வருகின்றனர்.

இந்த நிகழ்வுக்குக் கண்டனம் தெரிவித்துள்ள கிளின்ரன் ''மீண்டும் ஒரு முறை எமது தேசம் அதிர்கின்றது. இந்த துப்பாக்கி வன்முறையினால் எமது இதயங்கள் கிழிக்கப்படுகின்றன'' என்றார்.

அண்மையில் அமெரிக்காவில் துப்பாக்கி வன்முறைகள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ)

## 10 ஆயிரம் குடிசைகள் டாக்காவில் அழிப்பு!

டாக்கா, ஒக. 13

பங்களாதேஷில் 10 ஆயிரம் குடிசைகள் பொலீஸாரால் இடித்து அழிக்கப்பட்டன.

பங்களாதேஷின் டாக்கா நகரில் புறநகர்ப் பகுதியில் உள்ள சேரிக் குடிசைகளே பொலீஸாரால் அழிக்கப்பட்டன.

டாக்காவில் அதிகரித்து வரும் கொலைச் சம்பவங்களை குறைக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கையால் இதுவரை 30 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

சேரிப் புறங்களிலேயே கொலைக் கும்பல்கள், போதைப் பொருள் விற்பனை நிலையங்கள், விபசார தொழிலில் ஈடுபடுபவர்கள் என பல வழிகளிலும் குற்றச் செயல்களைப் புரிவோர் வசிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை —

டாக்காவில் கொலைச் சம்பவங்களைக் குறைப்பதற்கு பாரிய நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளதாக பங்களாதேஷ் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ-க)

## உலக அரங்கில்

## நள்ளிரவு வரை பொதுக்கூட்டம்

தேர்தல் குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ்குப்தா வெள்ளிக்கிழமை ஆலோசனை நடத்தினார்.

தலைமைச் செயலகத்தில் நடந்த இக்கூட்டத்தில் 38 கட்சிகளின்தலைவர்கள், பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்

ஊர்வலங்கள் மற்றும் பொதுக் கூட்டங்களுக்கு காலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை என்று இருக்கும் காலவரையறையை தளர்த்தி இரவு 12 மணிவரை நீடிக்கும்படி அனைத்து அரசியல் கட்சிகளும் கோரிக்கை விடுத்தன.

வாக்கு அடையாளச் சீட்டு எழுதுவதற்கு ஏதுவாக வாக்காளர் விவரங்கள் அடங்கிய பட்டியல்களை சி. டி. ரோம்களில் விரைவில் வெளியிடுமாறும், வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றுதல் மற்றும்வாக்குப் பெட்டிகளைக் கடத்துதல் போன்ற வன்முறைச் செயல்கள் நடக்காமல் தடுக்கஉரிய நடவடிக்கைகளுக்கு வேண்டுமென்று அரசியல் கட்சிகள் வேண்டுகோள்விடுத்தனர்.

## ஆந்திரப் பிரதேசத்தில் பா. ஜ. க- தெலுங்குத் தேசம் இணைந்து போட்டியிடும்

புதுடில்லி, ஒக. 13

இந்திய பொதுத் தேர்தலில்ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் தெலுங்குதேசக் கட்சியும் பாரதிய ஜனதாக் கட்சியும் இணைந்து போட்டியிட உள்ளன.

பாரதீயஜனதாக்கட்சிக்கும் தெலுங்கு தேசக் கட்சிக்கும் இடையில் தொகுதிப் பங்கீடு மட்டுமே உண்டு. தேர்தல் கூட்டணி எதுவும் இல்லை என்று தெலுங்கு தேசக் கட்சியின் அரசியல் அதிகார பீட உறுப்பினர் யு. வெங்கடேஸ்வரலு தெரிவித்தார்.

ஆந்திரப்பிரதேசத்தில் இரு கட்சிகளும் இணைந்து போட்டி இடும். எனினும் தேசிய ஜனநாயக முன்னணியில் தெலுங்கு தேசம் சேராது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆந்திரப் பிரதேசத்தில் பாரதீயஜனதா தனித்தே போட்டியிட விரும்பியது. எனினும் தெலுங்குத்தேசம் ஆதரவு தரமுன்வந்ததை அடுத்து அதனுடன் சேர்ந்து போட்டியிடுவது என கட்சி முடிவு செய்தது எனபாரதீய ஜனதாக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வெங்கையா நாயுடு தெரிவித்தார்.

இதேவேளை —

கர்நாடக மாநிலத்தில் லோக்சக்தி, மற்றும் ஐக்கிய ஜனதாதளம் ஆகியவற்றுடன் இணைந்து போட்டியிட பாரதீய ஜனதாக்கட்சி தீர்மானித்துள்ளது. [ஐ-6]

## சீனாவில் பொது இடங்களில் கருத்தடை உறைகளை வழங்கும் இயந்திரங்கள்

பீஜிங், ஒக. 13

சீனாவில் அதிகரித்து வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டின் இரு பிரதான நகரங்களில் கருத்தடை உறைகளை விற்பனை செய்யும் இயந்திரங்களை இந்தவார முற்பகுதியில் பொது இடங்களில் நிறுவுவதற்கு சீனா திட்டமிட்டுள்ளது.

தென்சீனாவில் உள்ள ஷென்ஷென் நகரில் பரீட்சார்த்தமாக நிறுவப்பட்ட கருத்தடை உறைகளை விநியோகிக்கும் இயந்திரத்துக்கு அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. இதனை அடுத்தே சீனாவின் பிரதான நகரங்களான பீஜிங் மற்றும் ஷங்காய் ஆகியவற்றில் இந்த இயந்திரங்களை நிறுவுவதற்கு சீனா திட்டமிட்டுள்ளது

இந்த இயந்திரத்தில் கருத்தடை உறைக்கான பணத்தைச் செலுத்திபதும் ஒருசில விநாடிகளிலேயே உறையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதனால் மருந்துச்சாலைகளுக்குச் சென்று உறைகளைக் கேட்கும்போது ஏற்படும் கூச்சம், தடுமாற்றம் என்பன எதிர்காலத்தில் ஏற்படாது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பீஜிங் மற்றும் ஷங்காய் நகர்களில் உள்ள நெருக்கமான குடியிருப்புப் பகுதி, பல்கலைக்கழக வளாகங்கள், ரயில் நிலையங்கள், பொது மலசல கூடங்கள் ஆகியவற்றுக்கு அருகில் இந்த இயந்திரங்கள் நிறுவப்பட உள்ளன. (ஐ-6)

## இந்தியா முழுவதும் விமான நிலையங்களுக்கு பலத்த பாதுகாப்பு

புதுடில்லி, ஒக. 13

இந்தியா தனது விமான நிலையங்கள் அனைத்திலும் பாதுகாப்பைப் பலப்படுத்தி உஷார் நிலையில் வைத்துள்ளது. பாகிஸ்தானுடனான பதற்றமும் பிரிவினை வாதிகளின் வன்முறைகளும் அதிகரித்திருப்பதை அடுத்தே விமான நிலையங்கள் உஷார் படுத்தப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் இராணுவ விமானம் ஒன்றை இந்தியா செவ்வாயன்று தனது எல்லையருகே சுட்டு வீழ்த்தியதை அடுத்து இரு நாடுகளிடையேயும் பதற்றம் அதிகரித்துள்ளது.

அஸாம் மாநிலத்தில் தரை வழி ரயில் பாதைகள் மீது பிரிவினைவாத தீவிரவாதிகள் கடந்த சில நாள்களாகத் தாக்குதல்களை நடத்தியிருப்பதை அடுத்து பாதுகாப்பு உஷார் உத்தரவு பிறப்பிக்கப் பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தியாவின் 62 விமான நிலையங்களிலும் விசேடமாக புதுடில்லி, மும்பாய், சென்னை, கல்கத்தா, திருவனந்தபுரம் ஆகிய சர்வதேச விமான நிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். [ஐ ரி]

## புராதன கிறிஸ்தவமடம் அமெ. தாக்குதலில் சேதம்

### ஈராக் குற்றச்சாட்டு

பக்தாத், ஒக. 13

தமது நாட்டின் வடபகுதியில் உள்ள நான்காம் நூற்றாண்டுக்குரிய கிறிஸ்தவ மதகுருமார் தங்கும் மடம் ஒன்று அமெரிக்க—பிரிட்டிஷ் விமானத்தாக்குதலினால் தாக்கப்பட்டுள்ளதாகவும் அதே பகுதியில் சூரிய கிரகணத்தை அவதானிக்க அமைக்கப்பட்ட முகாமில் பலர் கொல்லப்பட்டுள்ளதாகவும் ஈராக் தெரிவித்துள்ளது.

அமெரிக்க—பிரிட்டிஷ் விமானங்கள் வடஈராக்கில் உள்ள புராதன நிலைகள் மீது நடத்திய தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்ததாக ஈராக் கூறிய போதும் எத்தனை பேர் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர் என்ற விவரம் குறித்து எந்தக்கருத்தும்வெளியிடப்படவில்லை.

''உள்ளூர் நேரப்படி காலை 10.30 மணியளவில் பாஷக்கா மாவட்டத்தில் உள்ள டெயார்மாட்டி பிராந்தியத்தில் தாக்குதல் இடம்பெற்றது''என்று ஈராக்கின் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனமான ஐ. என், ஏ கூறியது.

வட ஈராக்கின் மலைகள் நிறைந்த பகுதியில் 4 ஆம் நூற்றாண்டுக்குரிய கிறிஸ்தவ பாதிரிமார் தங்குமிட பகுதி அமைந்துள்ளது.

சூரிய கிரகணத்தை அவதானிக்க எகிப்து, லிபியா,

[10 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### புறோயிலர் குஞ்சுகள்

வெள்ளிக்கிழமை 13-08-99 மாலை புறோயிலர் குஞ்சுகள் மிகவும் குறைந்த விலையில் விநியோகிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட பிறிமா Hi-line வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகளுக்கு திகதி மிக விரைவில் அறிவிக்கப்படும். வை. சிவகுமார், அத்தியடிச் சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(68133)

### தவறிவிட்டது

வைத்திலிங்கம் சதீஸ் என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 0914002444) யும் வைத்தீஸ்வரா பாடசாலை அடையாள அட்டையும் 03-08-99 அன்று வண்ணார் பண்ணை வீதியடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வைத்தீஸ்வராச்சந்தி ரீனி கபே எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (68146)

செல்வாபுரம் கரணவாய் கிழக்கு கரவெட்டி என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தப்பக்குருக்கள் மீனாதேவி என்பவரது தேசிய அ. அட்டை (738621867 V) விசேட அ. அட்டை (090901763), பல்கலைக் கழக அ. அட்டை என்பன 10-08-99 இல் நல்லூர், அரசடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அபிராமி கொமினிக்கேஷன் பரமேஸ்வராச்சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(68135)

## விளையாட்டுவிழா

சண்டிலிப்பாய் ஓக. 13

மானிப்பாய் கோயில் பற்று இந்து சமய விருத்திச் சங்க பாலர் கல்விப் பூங்கா விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரியில் சங்கத் தலைவர் ச. சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச செயலரும், வலி. தென் மேற்கு பதில் பிரதேச செயலருமான கா. சந்திரராசா கலந்து கொள்வார். கௌரவ விருந்தினர்களாக மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத் தலைவர் ஆர். சிவயோகன் பிரபல வர்த்தகர் வே. சி. கணபதிப் பிள்ளை ஆகியோர் கலந்துகொள்வார்கள். (ஐ-135)

### A/L பௌதிகவியல்

பௌதிகவியல் இணைந்த கணிதம் மேற்படி பாடங்களில் பயிற்சி பெற்ற ஆசிரியரினால் மிகச் சிறப்பாக குறுகிய காலத்தில் முழுப்பாடத் திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும். வகுப்புகள் நடைபெறுகின்றன. தனிப்பட்ட முறையிலும் தொடர்பு: 3 மணிக்குப் பின் R.பாலசுப்பிரமணியம், B. Sc. [Cey] Dip. in Ed, 17/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(68132)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (புறோயிலர்) விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: கண்ணா வீடியோ சென்ரர் வளவு, மான் பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம்.

(68155)

### விற்பனைக்கு

3 மாதம் நிரம்பிய பொமனேரியன் ஆண் நாய்க்குட்டியும் 5 மாதம் சினை உடைய நல்லின ஆடு ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. பத்மநாதன் ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு.

(68145)

தென்மராட்சி மக்கள்

## சுலபமாக ரீ. வி. டெக் திருத்த

தென்மராட்சி மக்கள் போக்குவரத்துச் சிரமமின்றி ரீ. வி., டெக், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக்கொள்ளவும், சிரமமான திருத்த வேலைகளை யாழ்ப்பாணத் தலைமையகத்தில் திருத்திக்கொள்ளவும்

**வீனஸ் டெல்கா**

11, பஸ் நிலையம், சாவகச்சேரி,
(மீன் சந்தை அருகில்)

(சி/8330)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 – 06 – 1918 | 14 – 08 – 1998 |

### சீவரத்தினம் சாமுவேல் அரியரட்ணம்

நல்ல போராட்டத்தைப் போராடினேன்;
ஓட்டத்தை முடித்தேன்;
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.
தீமோத். 1: 7

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

126, 2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். [68134]

## விசேட ஆங்கில வகுப்புக்கள்

A/L பரீட்சை எடுத்தவர்கள், உயர் கல்வி மாணவர்கள் மற்றும் தொழில் புரிவோர்களுக்கானது.

1 ஆம் பிரிவு ஆரம்பம்: 16-08-99 திங்கள்
காலை 10 மணி (பழையநேரம்)

பதிவு செய்யுமிடம்: கெங்கா கல்வி நிலையம்
கிராமக் கோட்டடி, சூசையப்பர் வீதி, புலோலி.

1 ஆம் பிரிவு ஆரம்பம்: 20-08-99 வெள்ளி
காலை 10 மணி (பழையநேரம்)

கலைமகள் சனசமூக நிலையம்
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

பதிவு செய்யுமிடம்: சீலைன்ஸ் கொம்ளெக்ஸ்
வதிரி வீதி, உடுப்பிட்டி.

By: Mr. T. Sutha (B. BA. Hons.)

(68164)

## லயன்ஸ் கழகம்
### சுன்னாகம்

## இலவச மருத்துவ சிகிச்சையும் கண் பரிசோதனையும்

இடம்: கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம்.
காலம்: 15-08-1999 ஞாயிறு காலை 9.00 மணி

லயன் Dr. வி. யோகேஸ்வரன் அவர்கள் தலைமையில் மருத்துவ பரிசோதனைகள் நடைபெறும்.

அளவெட்டி, மல்லாகம், ஏழாலை கிராமங்களில் உள்ள பார்வை குறைபாடுடையவர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் கண் பரிசோதனை நடைபெறும். நீரிழிவு, இரத்த அழுத்தம், இரத்தப்பரிசோதனை, பற்பரிசோதனை போன்றனவும் மேற்கொள்ளப்படவுள்ளன.

கண் பரிசோதனை செய்பவர்கள் லயன்செ. சச்சிதானந்தத்திடம் முன்கூட்டியே பெயர்களை பதிவுசெய்து கொள்ளவேண்டும்.

இதுவரை திருமணப்பதிவு செய்யாதவர்களுக்கும் திருமணப்பதிவு மேற்கொள்ளப்படவுள்ளது.

செயலாளர்
லயன்ஸ் கழகம், சுன்னாகம்.

விளம்பர அன்பளிப்பு:

**எரிக்கணேஷ்**

மூக்குக் கண்ணாடி அகம்
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2486 (68165)

## 1 ஆம் வருட நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 07 – 09 – 1933 | 13 – 08 – 1998 |

அமரர்

### அமிர்தநாதர் பிரகாசநாதர்

''அமிர்த இல்லம்'' நுணசை வீதி, மாதகலைப் பிறப்பிடமாகவும், 41/1 A, ஈச்சமோட்டை றோட், யாழ்ப்பாணத்தில் வசித்துவந்தவருமாகிய அமிர்தநாதர் பிரகாசநாதர் அவர்கள் இறைபதம் அடைந்த ஒருவருட நினைவஞ்சலி இன்று (13-08-99) வெள்ளிக்கிழமை ஆகும். இன்றையதினம் மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் காலை 7.30 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இப்பலியில் பங்குபற்றி அன்னாரது ஆன்மசாந்திக்காகச் செபிக்கும்படி உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'அமிர்த இல்லம்',
நுணசை வீதி,
மாதகல். (68150)

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட அமெரிக்க - கொரிய தயாரிப்புக்களான

## டிஷ் அன்ரெனாக்கள்
## விற்பனைக்கு

1) 8'' Dish Set
அமெரிக்க Eurostar Receiver
L. N. B. F.
Set ஆக விலை 30,000/-

2) 8'' Dish Set
கொரிய Alfagold Receiver
L. N. B. F.
Set ஆக விலை 28,000/-

3) 8'' Panel Dish Set
அமெரிக்க Eurostar Receiver
L. N. B. F.
Set ஆக விலை 32,500/-

4) 6'' Dish Set
கொரிய Alfagold Receiver
L. N. B. F
Set ஆக விலை 25,000/-

மற்றும் டிஷ் அன்ரெனாவினுடைய பொருள்களான Dish Set, Receiver வகைகள், L. N. B. F வகைகள் Wire என்பவற்றை தனித்தனியாகவும் நியாய விலையிலும் பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:

## அருண் வீடியோ மூவி

பிரதான வீதி, நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. வடக்கில் அபிவிருத்தி வேலைகளுக்குப் பணம்

வலிகாமம் தெற்கு, ஓக. 13

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை வேலைத் திட்டங்களின் கீழ் பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்கென இவ்வருடம் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. குளங்கள் ஆழமாக்கல், பராமரித்தல், வீதிகள் புனரமைப்பு செய்தல், முன்பள்ளிகள் புனரமைப்பு, விளையாட்டுக்கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் போன்ற பல்வேறு அபிவிருத்திகளுக்காக இந் நிதி பயன்படுத்தப்படும்.

பிரதேச செயலகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வேலைத் திட்டங்களினதும் அவற்றுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதித் தொகைகளினதும் விவரம் பின்வருமாறு:—

★ முன்பள்ளி கூரை அமைத்தலும் திருத்தம் செய்தலும் — இரண்டு லட்சம் ரூபா.

★ அளவெட்டி பினாக்கைக் குளம் ஆழமாக்கல் — ஒரு லட்சம் ரூபா.

★ நீலியம்பனைக் குளம் பராமரித்தல்— ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா.

★ குளமங்கால் வீதி திருத்தம் — ஒரு லட்சம் ரூபா.

★ சோடாக் கம்பனி வீதி திருத்தம்— 75 ஆயிரம் ரூபா.

★ வயாவிளான் கோணாவளை வீதி திருத்தம்— 75 ஆயிரம் ரூபா.

★ மல்லாகம் கும்பலைக் குள வீதி திருத்தம்—65 ஆயிரம் ரூபா.

★ அளவெட்டி காட்டுப்புலம் பாடசாலை வீதி திருத்தம்— 60 ஆயிரம் ரூபா.

★ மல்லாகம் காளி கோயிலடி ஆராச்சி சீமா வீதி திருத்தம்— 50 ஆயிரம் ரூபா.

★ விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்க— 50 ஆயிரம் ரூபா.

மொத்தமாக இவ் வருட அபிவிருத்தி வேலைகளுக்கென ஒன்பது லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினரால் செய்யப்பட்டுள்ளன.

(ஐ- 152)

## அம்பனில் புலி உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா, ஓக. 13

வடமராட்சி கிழக்கு, அம்பன் பகுதியில் கடந்த 6 ஆம் திகதி இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் தமது தரப்பில் சிவபாலன் அல்லது சுருளி (யேசுதாஸ் அன்ரனிதாஸ்— யாழ்ப்பாணம்) என்பவர் உயிரிழந்தார் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

[ஐ—9]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**வீரசிங்கம் கணேசன்**

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியரும் நாடக ஆசிரியரும்)

தோற்றம் 1930-05-31 — மறைவு 1998-07-25

எமது அன்புத் தெய்வமே
பாசமுள்ள தந்தையே
நீங்கள் அணைந்து ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகிறோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை

(68148)

---

卐
சிவமயம்

## சபிண்டீகரண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் ஆடி மாதம் 15-07-1999 வியாழக்கிழமை சிவபதமடைந்த

எமது குடும்பத் தலைவர்

அமரர்

**தங்கவேல் சத்தியதேவன்**

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உதவியாளர் (T A.) - நீர்ப்பாசனத் திணைக்களம்)

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் ஆடி மாதம் 29 ஆம் நாள் (14 – 08 – 99) சனிக்கிழமை முற்பகல் 10. 00 மணி முதல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

61, (193) பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(68152)

---

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 — 06 — 1926



உதிர்வு 28 — 07 — 1987

அமரர்

**நாகமுத்து கனகசபை**

(ஓய்வுபெற்ற நில அளவை [illegible])

திதி: 13 – 08 – 99

கண்ணைக் குளமாக்கி விட்டவரே
எண்ணும் பொழுதெல்லாம் துயரமே
மண்ணில் மறைந்தும் மனதில் நிறைந்துள்ளீர்
மீண்டும் எம்மிடம் வருவீராக.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிநிற்கும்

மனைவி, பிள்ளைகள்.

அ. கந்தையா,
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.


(68142)

---

## முதலாவது சிரார்த்த தின அஞ்சலி



செல்வி
**அ. இந்துமதி**
தோற்றம்: 05 – 05 – 1968
மறைவு: 25 – 07 – 1998



திருமதி
**கி. சிவகெங்கா**
தோற்றம்: 11 – 04 – 1950
மறைவு: 25 – 07 – 1998

ஆழ்கடலில் உங்கள் இருவீரையும் பறிகொடுத்த பெருந்துயரம்
ஆறாது ஆறாது அவலமது உருகுகிறோம் நாம்
ஏழ் ஜென்மம் எடுத்தாலும் எம்மிதயம் மறப்பதில்லை
எங்குடியிற் பிறிதொருகால் ஜென்மிக்க வாரீரோ!

தங்கள் பிரிவால் துயரில் மூழ்கும்:
குடும்பத்தினர்.

கம்பர் மலை,
வல்வெட்டித்துறை.

[68136]

---

## இராண்டாம் ஆண்டு 'நினைவஞ்சலி

மலர்வு 15 — 03 — 1947



உதிர்வு 05 — 08 — 1997

அமரர்

**பொன்னுத்துரை யோகநாதன்**

[வர்த்தக முகாமையாளர்/ பதில் பொது முகாமையாளர் நல்லூர் ப. நோ. கூ. சங்கம்]

திதி: 13–08–1999

உடலால் பிரிந்தாலும் உள்ளத்தால் எம்முடன்
குடியிருக்கும் எங்கள் அருமை — அப்பாவே!
இன்று எல்லோர் நெஞ்சத்திலும் நினைவு கூரும்,,
இத்தினத்தில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!


யோ. ரதிகா (மனைவி),
யோ. றயோசன் (மகன்),
குடும்பத்தினர்.

கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு

(68128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **இளையதம்பி குணசிங்கம்**
(ஆசிரியர் விக்கினேஸ்வராக் கல்லூரி)
(B A. Dip. in Ed.)

பிறப்பு: 10 - 02 - 1952 இறப்பு: 19 - 07 - 1996

திதி: 13 - 08 - 1999

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

புதுக்குளம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(68147)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
**இராசம்மா சங்கரலிங்கம்**

தோற்றம்: 10-06-1935 மறைவு: 15-07-1999

ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றுவிட்ட அம்மா எம் இதயமெல்லாம் நிறைந்திருக்கிறது உங்கள் நினைவு.

எங்கள் குடும்பத் தலைவி அமரர் இராசம்மா சங்கரலிங்கம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் ஏனைய வழிகளில் உதவிய அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (13-08-1999 — வெள்ளிக்கிழமை) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

கணவர், பிள்ளைகள்.

மின்சார நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

[68154]

## வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய அதிபர் திருமதி தவமணி பரமானந்தர் அவர்களின் சேவைநலன் பாராட்டுச் சிறப்பிதழ்



**திருமதி தவமணி பரமானந்தர்** S. L. P. S. Grade II

### தந்தை வழிநின்ற தவமணி பரமானந்தர்

யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தைக் கடந்த சில வருடங்களாகத் தலைமை தாங்கி வழிநடத்திய அதிபர் திருமதி த. பரமானந்தர் அதிபர்களிலே மேன்மையானவர். ஒரு பாடசாலையின் உயர்வுக்கு உந்துவிசையாக விளங்குபவர் அதிபரேயாவர். எமது பாடசாலைகளில் பல வளங்குன்றியவையாகும். வளங் குன்றிய பாடசாலைகளின் அருமையான வளங்களைத் திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தி, இசைவுபடுத்தி மாணவரது அடைவை மேம்படுத்துபவர் நல்லதிபராக விளங்குகிறார். அத்தகைய தன்மைகள் யாவும் கொண்ட ஒட்டுமொத்த உருவமே திருமதி த. பரமானந்தர். அவரதுகாலத்திற் பாடசாலை பல துறைகளிலும் வளர்ச்சி கண்டது.

வ. செல்வராசா
வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.

### பிரதேச செயலரின் ஆசிச்செய்தி

வரணியின் வரலாற்றில் புகழ்பூத்த ஆசிரிய குடும்பத்தில் உதித்த அதிபர் திருமதி தவமணி பரமானந்தர் அவர்கள் இன்று இளைப்பாறுகின்றார். ''எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவம் என்ப இழுக்கு' என்ற வள்ளுவனின் வாக்குக்கிணங்க தமது வாழ்க்கையை அமைத்துள்ளார். எந்த விடயமானாலும் அவற்றில் துணிவு, தீவிரம், கடின உழைப்பு, உற்சாகத்துடன் செயலாற்றும் பண்பை அவரிடம் நான் காண்கிறேன். அவர் ஒரு போதும் நடப்பதே இல்லை. ஓட்டம் தான். அவரின் நடை நேர முகாமைத்துவத்தை கண்டிப்பாக கடைப்பிடிப்பவர்.

### அறவழி நின்று அயராது உழைக்கும் பெரியார்

அதிபர் திருமதி த. பரமானந்தர் அவர்கள் இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் கட்டட ரீதியில் என்றால் என்ன கல்வி ரீதியில் என்றால் என்ன மிகக்குறுகிய காலத்தில் பெரும் வளர்ச்சியைக் கொண்டு வருவதற்கு அயராது உழைத்த பெருந்தகை. அர்ப்பணிப்போடும் ஊக்கத்தோடும் அறவழி நின்று உழைக்கும் அன்னார் நீடு வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சி. துரைராசா
முன்னாள் கொத்தணி அதிபரும், பா. அ. சபை உபதலைவரும்.

### நிறை வாழ்வு கண்டவர்

எமது வித்தியாலய அதிபர் திருமதி த. பரமானந்தர் அவர்கள் பல முன்னோடி அதிபர்களுள் ஒருவர். எந்த நேரமும் சிரித்த முகத்துடன் நயமாகவும் அன்பாகவும் பேசிப்பழகும் அவர் பழமைபேண் வாதியல்லர். சமூக வளர்ச்சிப் போக்கின் வரலாற்றுத் தாக்கத்தினை உணர்ந்தமையால் அவர் மாணவர்கள் ஆசிரியர்களை ஒரு தாயின் அன்புடன் அரவணைத்துப் பழகுவார். அன்னார் எமது பாடசாலையில் மாணவியாக, ஆசிரியராக, அதிபராக வாழ்ந்தவர். அவருக்கு இன்னும் நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் கிடைக்க வாழ்த்துவோம்; பிரார்த்திப்போம்!

திருமதி ம. குமாரகுலசிங்கம்
உப அதிபர், ஆசிரியர் கழகத் தலைவர்.

### நடையில், உடையில், மொழியில் ஆசிரியத்துவம் துலங்கிடவாழ்ந்தவர்

அகல்விளக்கென துலங்கிடும் எங்கள் அதிபர் திருமதி தவமணி பரமானந்தர் அவர்கள் அன்பு, அறிவு, பாசம். நேயம், கடமை. கண்ணியம். செயற்றிறன், கம்பீரம், இல்லாளியல்பு, கடவுள் நம்பிக்கை, விசுவாசம், மும்மொழித் தேர்ச்சிகொண்டு நடையில். உடையில். மொழியில் ஆசிரியத்துவம் துலங்கிட வாழ்ந்தவர். இவர் இளைப்பாறினும் இவரது சமூகசேவை தொடர்ந்திட சிறந்த ஆயுளும் ஆரோக்கியமும் பெற்று வாழ்வு வளம் பெற ஈசன் அருள்வாராக.

மு. ஆனந்தராஜா தலைவர், ப. மா. சங்கம்.

மலர் வெளியிடுவோர்: பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பழைய மாணவர்கள், மாணவர்கள். (68091)

## சேவை நலன் பாராட்டு விழா

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணியவித். அதிபர் திருமதி தவமணி பரமானந்தரின் சேவைநலன் பாராட்டு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் நாளை மறுதினம் 15ஆம் திகதி காலை 9.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

சேவை நலன் பாராட்டு விழாவில் தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசாவும், தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும் விசேட வாழ்த்துரை வழங்குவார்கள். மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சபையினர் மற்றும் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் இவ்விழா இடம் பெறவுள்ளது. (ரி)

## ஓடு பிரித்து திருட்டு

வலி. வடக்கு, ஓக. 13

நள்ளிரவு நேரம் வீட்டு ஓட்டைப் பிரித்து இறங்கிய திருடர்களினால் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகள் திருடிச் செல்லப் பட்டுள்ளன.

நேற்று முன்தினம் கொக்குவில் கிழக்கு கோவில் வீதியில் அமைந்துள்ள கிராம அலுவலர் ஒருவரின் வீட்டிலேயே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

சங்கிலி, காப்பு, பிள்ளைகளின் காதணிகள் மற்றும் உடு புடைவைகள் மணிக்கூடுகள் என்பன திருடப்பட்டுள்ள பொருள்களாகும்.

(ஜ-86)

## வீடு சேதமடைந்த 9 பேருக்குக் கடன்

சண்டிலிப்பாய், ஓக. 13

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புனர்வாழ்வு புனரமைப்பு வீடமைப்பு கடன் திட்டத்தின் கீழ் வீடு சேதமடைந்த ஒன்பது பேருக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரை கடனுதவி வழங்கப்படும் என்றும் ஆரம்ப கட்டகொடுப்பனவு வழங்கப் பட்டுள்ளதாகவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவு வீடமைப்புத் தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஏ. ஜெயகரன் தகவல் தெரிவித்தார்.

(இ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பயன்தரவல்ல முயற்சி

நேற்று முன்தினம் புதன் கிழமை கொழும்பில் அரசியல் கட்சிகள் மூன்று சேர்ந்து மறியற் போராட்டம் ஒன்றை நடத்தின. கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னர் நடத்தப்பட்ட இந்த மறியல் போராட்டத்தில் புதிய இடதுசாரி முன்னணி, ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் தொண்டர்களும் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

வன்னி மக்களுக்கு எதிராக உணவையும், மருந்தையும் ஆயுதங்களாகப் பயன்படுத்தக் கூடாது என்று கோரியே இந்த மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. வன்னி மக்களுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட இத்தகைய போராட்டம் கொழும்பில் இது முதலாவதுஎன்றுகொள்ளலாம்,

வன்னியில் வாழும் மக்களும் இந்த நாட்டின் குடிமக்களே என்று அரசாங்கம் கருதுவதாக, வன்னிக்கான பாதை திறப்பு சம்பந்தமாக அரசு அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தது. பாதை திறக்கப்பட்டதும், அதில் இருந்த முட்டுக்கட்டையை நீக்கி வன்னி மக்களும் இந்நாட்டு மக்களே என அரசாங்கம் செயற்படுவது நிரூபிக்கப்பட்டுள்ளதாக அரசு சார்பு பொதுசனத் தொடர்பு ஊடகங்கள் சிலாகித்துப் பேசின.

உண்மை அதுவாக இருந்தால், வன்னிப் பிரதேசத்து மக்களுக்குத் தேவையானபொருள்களை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும். போர் நடைபெறும் ஒரு பிரதேசத்துக்கு உணவு மற்றும் பொருள்களை மக்களுக்கு அனுப்புவதன் மூலம், அரசை எதிர்த்துப் போராடும் போராளிக்கும் அவை கிடைக்கும் ஒரு நாடு இலங்கை மட்டுமே என்றும் அரச தரப்பில் சிலர் கருத்து வெளியிட்டனர். நிலைமை அதுவேயானால், வன்னி மீது பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்துவது ஏன்?

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கு அங்குவாழும் மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய அளவு உணவு மற்றும் பொருள்கள் அனுப்பப்படுவது இல்லை. அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் எண்ணிக்கையை குறைத்துக் காட்டுவதிலும், குறைந்தளவு பொருள்களை அனுப்புவதிலும் கொழும்பு அரசு அதீத அக்கறை காட்டுகிறது. தனது புள்ளி விவரத்தையே கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களும் நம்பவேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றது

வன்னிப் பிரதேசத்தில் பணிபுரியும் அரசாங்க உயர் அதிகாரிகளை எப்போதும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதோடு, அவர்கள் உண்மை நிலைவரத்தை வேறு எவருக்கும் சொல்லக்கூடாது என்று "அடக்கவும்" முனைகிறது.

பாதை திறப்புடன் சம்பந்தப்பட்ட காலத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு அரசாங்க அதிபர்கள் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டதற்கு கொழும்பு அதிகாரிகளும், அமைச்சர்களும் கூறும் காரணங்களை மக்கள் நம்புவதாக இல்லை. உண்மையை வெளியில் சொன்னார்கள் எபன்தற்காகப் "பழி வாங்கப்பட்டார்கள்" என்ற அபிப்பிராயத்தை அழிப்பது கடினம்.

எப்படியோ. வன்னி மக்களின் உண்மை நிலையை வெளிக்கொணர புதன்கிழமை கொழும்பில் நடத்தப்பட்ட போராட்டம் போன்றவை பெரிதும் உதவும். இதே வகையில் வன்னி மக்களுக்கு ஆதரவான போராட்டம் தெற்கில் தொடர வேண்டும். நல்ல, காத்திரமான முயற்சி அது.

# அம்பிகையை உபாசிப்பதற்கு சிறப்பான தினம் ஆடிப்பூரமே!

சைவ சமய சான்றோர்கள் மக்களை வாழ்வாங்கு வாழவைப்பதற்குப் பல்வேறு வழிமுறைகளை வகுத்துள்ளனர். அவ் வகையில் ஒரு வருடத்தை உத்தராயணம், தெட்சணாயனம் என இரு பெரும் முக்கிய காலப் பகுதிகளாக வகுத்துள்ளனர்.

அவ்வகையில் இம்மாதம் ஆடியிலிருந்து தெட்சணாயனம் ஆரம்பமாகின்றது. தெட்சணாயன ஆரம்பமான ஆடிப்பிறப்பு, ஆடிஅமாவாசை, ஆடிப்பூரம், ஆடிச் சுவாதி என்பனவும், ஆடிச் செவ்வாயும் சிறப்பான விரத நாள்களாகவும், வழிபாட்டு நாள்களாகவும் எம் மக்கள் கொண்டாடுகின்றார்கள். தமிழ் நாட்டிலும் இன்னும் சில இடங்களிலும் ஆடி பதினெட்டாம் நாளை ஆடிப் பெருக்கு எனக் கொண்டாடுவதும் அறியக்கூடியதாக உள்ளது.

இன்று கொண்டாடப்படும் ஆடிப்பூர நன்னாள் எம் மக்களால் விசேடமாகச் சக்தி வழிபாட்டு நாளாகவும் விரத நாளாகவும் போற்றப்படுகின்றது. சிவனுக்குத் திருவாதிரையும், திருமாலுக்குத் திருவோணமும், முருகனுக்கு விசாகமும் போலச் சக்திக்குப் பூரம் சிறப்பாகப் போற்றப்படுகின்றது. ஆடிப்

## ஞானக் கதிர்

பூரம் அம்பிகையின் திருவவதாரத் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது. இந் நாளிலே அம்பாளுக்கு விசேட பூசை வழிபாடுகளும், உற்சவங்களும் அம்மையார் பூப்பெய்திய நன் னாளாகக் கருதி ஆலயங்களில் "பூர கர்மம்" எனும் பூப்பு நீராட்டுவைபவ விழாக்களும் ஊஞ்சல் வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன.

பூர நட்சத்திரம் மாதந்தோறும் வருவதாயினும் ஆடிப் பூரமே சிறந்த நாளாகக் கொண்டாடப்படுகின்றது. இந்த ஆடிப்பூர நன்னாளிலேயே மகாலட்சுமியின் அவதாரமாகக் கருதப்படும் ஆண்டாள் அவதரித்த தினமாகவும் கொண்டாடப்படுகின்றது. உலகத் தோற்றத்திற்கு மூல காரணம் சக்தியே என்பதையும் உணர்த்த "ஆடி முளை தேடி நடு" எனவும் "ஆடி உழவு தேடி உழுவீர்" எனவும் நம்முன்னோர் இம் மாதத்தைச் சிறப்பித்துள்ளனர். அன்றியும் தை முதல் ஆனி வரை கோடை காலமாகவும், ஆடி முதல் மார்கழி வரை மாரி மழை காலமாகவும் ஆன்றோர் பிரித்திருப்பதும் ஆடி மாதத்தை மக்கள் சிறப்பாக எதிர்கொண்டு போற்றக் காரணமாகின்றது.

நம் முன்னோர்கள் ஆடி மாதத்திலேயே வயல் உழுது பயிர் செய்ய ஆரம்பிப்பது வழக்கம். இன்று பருவகாலம் பொய்த்துப் போனதனால் இது காலந்தவறி நடைபெறுகின்றது. எனினும் ஆடி மாதத்தில் பல இனப்பட்ட பயிர்களும் முளையிடுதல் இன்றும் காணக்கூடியதாகவுள்ளது. நாம் வாழும் பூமி

### "நீர்வை சர்மா"

யும், பூமியில் பெறும் நல் விளைவுகளும் சக்தியின் பேராற்றலால், அருளால் கிடைப்பனவே என்பதை நன்றியுணர்வுடன் போற்றிக் கொண்டாடவேண்டியது ஆடிப்பூரநன்னாளாகும். ஆன்றோரால் எமக்கு வகுக்கப்பட்ட நன்னெறி நாளாகவும் இதனைக் கருத முடிகின்றது. எனவே ஆடிப்பூர நன்னாளில் உலகமாதா சக்தியாகிய அம்பிகையை வழிபட்டு நல்லருள் பெறுவோமாக! அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம். ★

# சொத்து இழப்பு

## வலிகாமம் தெற்கில் 2 ஆம் கட்ட கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு, ஓக. 13

கடந்த கால வன்செயல் சம்பவங்களால் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் அசையும், அசையா சொத்துக்களை இழந்தவர்களுக்கான இரண்டாம் கட்ட கொடுப்பனவுத் தொகைகள் வழங்கப்பட உள்ளன.

ஆயிரத்து 500 ரூபாவுக்குக் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுள் 600 குடும்பங்களுக்கு இந்த இழப்பீட்டுத் தொகையின் முதல் கட்ட இழப்பீட்டுத் தொதை 5 ஆயிரம் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட வேண்டிய 25 ஆயிரம் ரூபாவில் முறையே 10 ஆயிரம், 10 ஆயிரம், 5 ஆயிரம் ரூபாவாக மூன்று கட்டங்களில் வழங்கப்பட வேண்டும் என்ற அறிவித்தலின் பிரகாரம் இரண்டாம் கட்டமாக இழப்பீட்டுத் தொகை 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட உள்ளது.

இரண்டாம்கட்டக் கொடுப்பனவுகள் 125 குடும்பங்களுக்கு உடனடியாக வழங்கப்படும் எனவும், ஏனையோருக்கு விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயிரத்து 500 ரூபாவுக்கு கூடிய வருமானமுடைய குடும்பங்களில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட உள்ளது. (ஐ-152)

# இறைச்சிக்கு பசு மாடுகளை வெட்டுவது குறித்து அறிவுறுத்து

திருநெல்வேலி, ஓக. 13

யாழ். மாவட்டத்தில் பசு மாடுகள் இறைச்சிக்காக கொல்லப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் தமது பிரிவிலுள்ள சகல பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் கடந்த வாரம் கடித மூலம் பணிப்புரை விடுத்துள்ளார்.

மாநகர சபை, பிரதேச சபை, நகர சபை ஆகியனவற்றின் கொல்களங்களில் பசு மாடுகளை இறைச்சிக்காக வெட்டப்படுவதை தடை செய்யுமாறும், இன விருத்திக்கு அல்லது வேறு தேவைக்கு இப்பசு மாடு பிரயோசனப்படாது என்று மிருக வைத்திய அதிகாரி சான்றிதழ் வழங்கிய கடிதத்துடன் வரும் பட்சத்தில் பசு மாட்டைக் கொல்வதற்கு அனுமதிக்கலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக யாழ் மாவட்டத்தில் இறைச்சிக்காக பசு மாடுகள் பெருமளவில் கொல்லப்பட்டுவருவதாக கிடைத்த புகார்களை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

[ஐ-135]

# தொண்டமானாறு பகுதிக்கு ஓரிரு தினங்களில் மின்

நெல்லியடி, ஓக. 13

பொலிகண்டி, தொண்டமானாறு பகுதிகளுக்கு, ஓரிரு தினங்களில் ஜெனரேற்றர் மூலம் மின் விநியோகம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே இலங்கை மின்சார சபை பொலிகண்டிப் பகுதியில் பொருத்திய ஜெனரேற்றர் மூலம் இப்பகுதியில், சில இடங்களுக்கு மின்சார விநியோகம் செய்யப்படாமல் இருந்தது. தற்பொழுது இணைக்கப்படும் ஜெனரேற்றர் மூலம் பொலிகண்டி முழுவதும் மின் விநியோகம் கிடைக்கும் என்றும் —

இதே வேளை தொண்டமானாறு பகுதிக்கும், வேறொரு ஜெனரேற்றர், இரண்டொரு தினங்களில் பொருத்தப்படும் என்றும் —

இலங்கை மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-109)

## பழைய மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம். ஓக. 13

வேலணை மத்திய ம. வி. பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் அடுத்தமாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [ஐ-ரி]

## பழமரச்செய்கை பயிற்சி வகுப்பு

மூளாய், ஓக. 13

வலிகாமம் மேற்குப் பகுதியில் பட்டினிக்கு எதிரான இயக்கம் பழமரச்செய்கை தொடர்பான பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகிறது.

கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே மேற்படி பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றைவிட ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் குறிப்பிட்ட எண்ணிக்கையான பயனாளிகளுக்கு பழமரக் கன்றுகளும் வழங்கப்படவுள்ளன.

[ஐ-99]

# தென்மராட்சிப் பகுதியில் 3 குளங்கள் புனரமைப்பு

## வேலைகள் ஆரம்பம்

வலி. கிழக்கு. ஓக. 13

உலகஉணவுத் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலர்பிரிவில் மூன்று குளங்களைப் புனரமைக்கும் வேலைகள் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டன.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கூனீக்கிராய்குளம், கைதடி அணைக்கட்டுக்குளம், இடிகுண்டு, ஆகிய மூன்று குளங்களின் புனரமைப்பு வேலைகளே கடந்த திங்கட்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் யாழ். மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் எஸ். சுந்தரேசன் தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் ரி. சிவானந்தன், பெரும்பாக உத்தியோகஸ்தர் எஸ். சத்தியேந்திரன் மற்றும் விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் விவசாயிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இப்பிரதேச செயலர் பிரிவில் மேலும் 4 குளங்களுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கமநல சேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இக் குளப் புனரமைப்பு வேலையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உணவுப் பொருள்கள் இலவசமாகவழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

## நாளை

ஆடி 29

சனிக்கிழமை

திதி: திருதியை

பிற்பகல் 3.30 வரை.

நட்சத்திரம்: உத்தரம்

பின் இரவு 4.37 வரை.

சுபநேரம்: 3.05—4.35

ராகுகாலம்: 9.05—10.35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நீ. பாவத்தை வெறுக்கலாம். ஆனால் பாவியை வெறுக்காதே. அவன் [illegible]

— சுவாமி ராமதீர்த்தர்

## துர்க்கை அம்மன் உற்சவம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 13

அருள் மிகு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் இடம் பெறவுள்ளன.

உற்சவத்தை முன்னிட்டு சுகாதாரப் பணிமனை மற்றும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ், சாரணர்களின் சேவைகள் என்பன வழமை போல் ஏற்படுத்தப்படவுள்ளதாக ஆலய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

(ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஓக. 13 குடாநாட்டில் இருந்து கப்பல் மற்றும் விமான மூலம் வெளியிடங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டிருப்போரின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியாகி வருகின்றன.

விமானம் மூலம் பயணம் செய்ய இம்மாதம் 6 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோரின் வீவரங்கள் இன்று முதல் பிரசுரமாகுகின்றன.

### பலாலி

எஸ். வில்சன்ஞானமலர் (105728பீ), ரீ. திரேசம்மா (105728சீ), எஸ். பிறேமதாஸ்(105728டீ), எஸ். அன்னலட்சுமி (105734ஏ), கே. வசந்தரூபன்(105737ஏ), பீ. அழகரட்ணம்(105740ஏ), ஏ. பத்மாவதி(105740பீ), எம். ஏ. ரோஸ்பிரேமா (105741 ஏ), ரீ. துஷகா (105741பீ), எம். லூடிலிசி (105741சீ), எஸ். நிரஞ்சன் (105741 டீ), ரீ. துவாரகா (105741 ஈ), கே. பாலசுப்ரமணியம் (105745ஏ), கே. கனகரட்ணம்(107858ஏ), கே. தங்கேஸ்(107858பீ), பீ. ராமசாமி(105727ஏ),

### மருதங்கேணி

எஸ். பூபதி (102810 ஏ), பீ, சின்னப்பிள்ளை (102810 பீ), எம். வல்லிபுரம் (106910 ஏ), ரீ. அனுலாவதி (105995 ஏ), ஏ. பரமேஸ்வரி (107950 ஏ), ஏ. பாலகுமார் (107950 பீ), எஸ். சிறிஸ்ரம்பா (108013 ஏ). பீ. பவானி (108118ஏ), ஏ. செபமாலை (108128 ஏ), எஸ். லிக்சன் (108128 பீ), ஏ. பாவிலு (108165 ஏ), எல். திரேசா (108165 பீ), ஜே. துசிகரன் (108165 சீ), என். திருலிங்கநாதன் (111649 ஏ), ஏ. கிருஷ்ணை அம்மா (105743 ஏ), எஸ். கிருஷ்ணதேவி (105774 ஏ),

### சாவகச்சேரி

பீ. சிவேள் [092278 ஏ]. விக்ரோறியா [095711 ஏ], ரீ. ஜீட்சிவி [095711 பீ], எஸ். எம். பெட்றொவனா [098899 ஏ]. ஜி. கிறிஷாந் [098899சீ], ஜி. ஐக்ஷனா ]098899 டீ], ஜி. நிதர்ஷனா [098899 ஈ]. எம். பத்மாவதி [098902 ஏ]. என். நித்திலிங்கம் [098902 பீ], கே. ஜெயகாந்தன் [098902 சீ], ரீ. பாஸ்கரன் [103738 ஏ], எஸ். தருமராணி [103766ஏ], வீ. திலகமலர் [105541 ஏ], வீ. பிரியா [105541 பீ], ஆர். திலகம் [105547 ஏ], ஆர். விநோஜன் [105547பீ), ஆர். தர்ஷன் [105547 சீ[, எஸ். சாலன் [105579ஏ], ஏ. காமராஜசிங்கம் [105627 ஏ], கே. கந்தசாமி [105640 ஏ].

கே. கலைவாணி [105640 பீ], கே. சிவகுருநாதன் [105656 ஏ], எஸ். மதிவதனன் [105656 பீ], ரீ. ஆறுமுகன் [105685 ஏ], ஆர். ஜானகி [105688 ஏ]. ஆர். சுதர்ஷன் [105688 பீ]. ஆர். கஸ்தூரி [10688 சீ], ஆர். சுதானா [105688 டீ], புஷ்பானந்தன் [105696 ஏ] கே. நாகேஸ்வரி [105701 ஏ],.

ஏ. கனகலிங்கம் [105701 பீ], வீ. ராதாபூபதி [105707 ஏ], ரீ.சின்னக்குட்டி[105715 ஏ], எஸ். முகுந்தன் [105715 பீ], எஸ். செந்தூரன் [108415 ஏ], எஸ். சரசு [108415 பீ], ரீ.கதிரகாமன் [108419 ஏ], எஸ். ஞானப்பிரகாசம் [98899 பீ], வீ. சுந்தரம் [027224 ஏ] எஸ். ரமணன் [027224 பீ],.

எம். சிவகுமார்(027224சீ), எம். றுக்மணி (099815ஏ), டபிள்யூ. வேலாயுதன் (099815பீ), டபிள்யூ. மஞ்சுளா(099815சீ),வீ.நாகம்மா (099827ஏ). எம். விஜயமோகன் (099827பீ), ரீ. மனோராஜ் (101874ஏ), ரீ. ஆசைப்பிள்ளை (101874பீ), எஸ்.சுசீலா(101874சீ), எஸ். ஷாமினா (101874டீ).

எஸ். தம்பிப்பிள்ளை (104003ஏ), எஸ். புஷ்பகரன் (104005ஏ),எஸ். ஜெகசோதிநாதன் (104974ஏ), ரீ. லீலாவதி (105007ஏ), ஜி. சவரிமுத்து (105014பீ), எஸ்.மகாலிங்கம் (107661ஏ), எஸ். சதாசிவம் (107666ஏ), எஸ். யோகேஸ்வரி (107666பீ), எஸ். ஏகாம்பரநாதன் (107671ஏ), பீ. தங்கராஜா (107679ஏ).

கே. பாலகௌரி (107692 ஏ), கே. செந்தில்நாதன் (107692பீ), எஸ். ரத்தினம் (105733ஏ), எஸ். டபிள்யூ. ஞானமலர் (107861ஏ), ரீ. திரேசம்மா (107861பீ), வீ. சோமசுந்தரம்(107893ஏ).

### பருத்தித்துறை

எஸ். தண்டபாணிகாதசிகர் (067790ஏ), வீ. தவச்செல்வம் (071321பீ), எஸ். ரட்ணவாசகம் (091066ஏ), ஆர். கிருஷானந்தன்(091066 பீ), எஸ். சரஸ்வதி (095392 ஏ), எஸ். நவமணி (095392 பீ), ஏ. ராஜரட்ணம் (098283ஏ), எஸ். வசந்தாதேவி (098283பீ), எஸ். பிரியந்தினி (098283சீ), ஆர். யோகரஞ்சிதம் (100795ஏ), பீ. சரோஜனா (100795பீ), கே. பாலசுந்தரம் (101124 சீ).

பீ. ஜெகம் (102853ஏ), எஸ். ஜெகதீஸ்வரி (102863 ஏ), கே. நரோஜனி (102926 ஏ), ஜே. றெஜினா (102971 ஏ), எம். சிவஞானசுந்தரா (102977ஏ), எம். சரஸ்வதி (102993ஏ), கே. முத்துக்குமாரசாமி (102993பீ), எம். கனகம்மா (103138ஏ), எம். தவமணி (103200ஏ), ஆர். சிந்துஜா (103200பீ), ஆர். ராகுலன் (103200சீ).

கே. பொன்னம்பலம் (103218ஏ),பீ. ஞானேந்திரராணி (103218பீ), பீ. வரதகுமார்(103218சீ), பீ.சுபாஷ்கந்தன்(103223ஏ), கே.ராஜ்குமார் (103233ஏ), எம். சந்திரமோகன் (105349ஏ), எஸ். முத்தையா(105357ஏ), எம். தனேஸ்வரி (105433ஏ), எஸ். லெட்சுமிப்பிள்ளை (105433பீ), எஸ். கோகிலா (105433சீ), எஸ். கோகிலன் (105433டீ), எஸ். ராகுலன் (105433ஈ),

ஏ. சிவபாலகிருஷ்ணன் (105433எவ்), ரீ. சண்முகராஜா (106684ஏ), வீ. முருகேசு (106763ஏ), எஸ். குலசேகரம் (106767ஏ), கே. விஷ்ணுகுமாரி (106767பீ), சீ. சிவகுருநாதர்(106778ஏ), என். முருகேசு (106780ஏ). ஏ. யோயன்பிள்ளை(106802 ஏ), ஐ. வேலுப்பிள்ளை (106847ஏ), என். பாலாம்பிகை (106854ஏ), என். வசீகரன் (106854பீ), என். பிரதீபரன் (106854சீ),

என். விஜயாபரன் (106854 டீ), என்.நிலோஜினி(106854 ஈ), பீ. சிவயோகன் (106898 ஏ), பீ.சிவபாக்கியம்(106898 பீ), பீ. யோசப் (106900ஏ), ரீ. கஜலக்சுமிதேவி (106907 சீ), எம். தியாகலிங்கம் (106911ஏ), ஆர். பரமு (106912ஏ), எஸ். சிதம்பரப்பிள்ளை (106945ஏ). எஸ். பிறின்ஸ் டியோனெசியஸ் (106947ஏ), வை. தசரதன் (106948ஏ), பீ. அன்னம்மா (106954ஏ), பீ. வசந்தாதேவி (106962ஏ),

பீ. பத்மாவதி [106981 ஏ], எஸ். தங்கம்மா[107024 ஏ], எஸ்,சியமாலா [107024 பீ], எஸ். உதயராணி [107028 ஏ], எஸ். சிறிகாந் [107028 பீ], எஸ். கருணாகரன் [107031 ஏ], ரீ. சௌந்தரசோதி ]107051ஏ], எம்.பரமேஸ்வரி [107053ஏ], எஸ். சந்ரகுமார்[107907ஏ], எஸ். சிவசுப்பிரமணியம் [107910 ஏ], எஸ். கேசிறிமாயவன் [107918 ஏ], ரீ. வாசுதேவன்[107921 ஏ], ஏ ஜோசப் [107927 ஏ], ஏ.மேரிதுஷாந்தினி[107927 பீ], எஸ். பாக்கியம் [107948 ஏ], குமரேசு அசோக்[107966 ஏ], கே. சுந்தரேஸ்வரன் [107983 ஏ],எஸ் யசோதரா [107983 பீ], ஏ. யசோதேவி [107986 ஏ], என். சண்முகம் [107996 ஏ]], எஸ். உதயன் [107996 பீ], எஸ். ரமேஷ் (107996 சீ], எஸ்.தங்கராணி [108001 ஏ].

எஸ். செல்வசுகனா ]108003 ஏ], எஸ். குணலிங்கம் [108008 ஏ]. பீ.சிறீஸ்கந்தராஜா [108021 ஏ], கே. பாலகிருஷ்ணபிள்ளை [108021 பீ], பீ. அன்னபூரணம் [108021 சீ], என். விஜயாபரன் [103021 டீ], எஸ். வள்ளிநாயகி [108024 ஏ), எஸ். யோகநாயகி [108024 பீ], ஏ. டக்சன் சிவராஜா [108026 ஏ[, ஜி. அன்னபாக்கியம் (108037 ஏ],என். சிவபாலன் [108056 ஏ], வை. பூமணி [108059 ஏ].

வை. ரஞ்சித்குமார் (108059பீ), எஸ். சீவரட்ணம் (108080ஏ), எம். இந்திராணி (108080பீ), எஸ். தவராஜா (108099ஏ), எஸ். சாந்தினி (108100ஏ), ரீ. சுதா (108100பீ), பீ. சுரேஸ்குமார் (108100சீ), எம். கத்தரின் ஜெபமலர் (108104 ஏ), ரீ. சந்திரலதா (108107 ஏ), ரீ. தவமணி (108107 ஏ), ரீ. சந்திரபவானி (108107சீ).

ஜீ. ரட்ணகுமார் [108110 ஏ]. வீ. ரங்கன் [108119 ஏ], எஸ்.ஞானமணி[108167 ஏ], எஸ். ஞானமணி [108167 பீ]. ஜே. தாட்சாயனி [108168 ஏ], ஜே. தாட்சாயணி [108168 பீ], ரீ. குலசிங்கம் [108174ஏ], கே. இந்திராணி [108174 பீ], ரீ. தங்கசாமி ]103180 ஏ], ரீ. பிரேமியா [108206ஏ].

ரீ.அபிராமி [108180பீ], எஸ்.பசுபதி[108185ஏ], எஸ் சிவயோகம் [108185பீ], பீ. பரமசோதி [108194ஏ], கே. சுப்ரமணியம் [108215 ஏ], எம். ஏகாம்பரநாதன் [108224ஏ], கே .மகாரசா [108234ஏ], எம். நாகம்மா [108234பீ], வீ, செல்லையா [108238ஏ], சீ. சலமோன் [108247ஏ].

எஸ். ஜெயக்குமார் (108250ஏ), எஸ். தவராஜா (108268 ஏ), எஸ். நவரட்ணராஜா, (108270ஏ) பீ. நமசிவாயம் (108272 ஏ), ரீ. சிவபாலசுந்தரம் (108274 ஏ), எம். மயூரன் (108275 ஏ) எஸ். பிரஷாந்தன் ( 108279 ஏ). பீ. சுகிர்தன் (108280 ஏ), எஸ். விக்னராஜா (108281 ஏ), வீ. விமலன் (108282 ஏ), பீ. பாலச்சந்திரன் (108283ஏ).

ரீ. சுதர்ஷன் (108287ஏ), பீ. வசந்த் (108319ஏ), பீ. பொன்னம்பலம் (108348ஏ), ஆர். லீலாவதி (108348பீ), ஆர். ரட்ணசிங்கம் (108348 சீ), எம். கலாநிதி (108352 ஏ), எம். சலிமினா (108352 பீ), பீ. ரேணுஜா (111123 ஏ), ஜீ. நிமலவர்ஷனி (111124ஏ), கே. ராஜேஸ்வரி (111125), பீ. ரோகினி (111221பீ,, பீ. ரோகினி (111222ஏ).

பீ. மேனிஜா (111223ஏ), ஜி. நிமலவர்ஷனி(111224ஏ), கே. ராஜேஸ்வரி(111225ஏ). எஸ்.கமலேஸ்வரன் (111238 ஏ), எஸ். தம்பிப்பிள்ளை (111319ஏ). ரீ. வள்ளிப்பிள்ளை (111319பீ), ரீ. பிரதீபன் 111319சீ), ரீ. கார்த்தீபன் (111319டீ), கே. அம்பிகை (111353ஏ), ஜி. ரவீந்திரன்(111353பீ), ஆர். ஜாமினி (111353சீ),

ஆர். ஜனனி (111353 டீ), ஆர். ஜனகன் (111353ஈ), ஆர். மகாலினி (111353 எவ்), ஈ. அருணாசலம் 111443 ஏ), ஆர். சந்ரசேகர (111498 ஏ), எம். செல்வராஜா (111541 ஏ), ஏ. வின்சன்மரியநாயகம் (111585ஏ), எம். சத்தியவதி (111646ஏ), என். வத்சலா நிரஞ்சனி (113368 ஏ), ஆர். பீ.விஜய குலரட்ண (113391 ஏ).

(தொடரும்)

# சுகாதாரமற்ற முறையில் இனிப்புப் பண்டங்கள்

## விற்போர் மீது நடவடிக்கை

திருவிழாக் காலங்களில் வீதி ஓரங்களில் வைத்து விற்கப்படும் இனிப்பு, பிஸ்கட் மற்றும் தின்பண்டங்களை கண்ணாடிப் பெட்டிகளில் வைத்து விற்பனை செய்ய வேண்டும் என்றும் சுகாதார விதிகளுக்கு முரணாக விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்றும் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

ஆலயங்களில் தற்போது திருவிழாக்கள் நடைபெற்று வருவதால் அங்கு சுகாதாரமற்ற முறையில் தின்பண்டங்கள். உணவு வகைகள் வீதி ஓரங்களில் வைத்து விற்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

உணவுச் சட்டத்தின் கீழ் இவ்வாறு விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு யாழ். சுகாதார சேவைகள் பிரதிமாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி. சிவபாதம் தமது பிரிவிலுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வாந்திபேதி போன்ற தொற்று நோய்கள் இவற்றால் பரவக் கூடிய நிலை ஏற்படும் என்பதால் இது விடயத்தில் விழிப்பாக இருக்குமாறு பொது மக்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் அரசினர் போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற யாழ் மாவட்ட சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களின் தலைவர்களுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் இது தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டு பொது மக்கள் நலன் கருதி சுகாதார பரிசோதகர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் அறிவுறுத்தினார்.


புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள்

விற்பனைக்கு

**T.Vகள்:**

Sony G.21
Sony G.14
Sony 29''

**V.C.Rகள்:**

Panasonic 220 AMJ
Panasonic 235
Panasonic SR 38
Sony ED1, ED10
JVC, Mitsubishi
570 Audio dupping

மற்றும் பல்வேறு வகையான

Tele sonic Radio வகைகள், Pioneer, VCD (750w) Player, +1 Rewinder, SKC, HD Video Cassette வகைகள், URmaxell Audio Cassette, Kobe booster, Head Cleaner, RF Cord Wire, Table Fan items, Plastic Chiar, Plastic Stool, LG Refrigerator

என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி:-

அருண் வீடியோ மூவி

பிரதான வீதி, நெல்லியடி.

[68156]


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துயர் துடைப்பு நிதி

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், ஒக. 13

தொடரும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் வகையில் துயர் துடைப்பு நிதி சேகரிக்கும் திட்டம் ஒன்றை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட — பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற — தமிழ் மக்களின் வாழ்வியல் துன்பங்களில் நாம் அனைவரும் பங்கேற்றுக் கொள்வது தவிர்க்கப்பட முடியாத மனிதநேயக் கடப்பாடு ஆகும்.

எம்மைச்சார்ந்த சமுதாயம் அவலங்களை எதிர் நோக்கி நிற்கின்ற போது அந்த அவலங்களைச் சுட்டிக் காட்டி எதிர்த்து நிற்கின்றவர்களாக எம்மைத் தயார்படுத்திக் கொள்ள ஒரு போதும் நாம் பின் நிற்கக்கூடாது,

அந்த வகையில் தமிழ் மக்களின் வேதனைகள் நிறைந்த அவல வாழ்க்கையில் பல்கலைக்கழக மாணவ சமூகம் பங்கெடுத்து, எம்மக்கள் அநுபவித்துக் கொண்டிருக்கும் துன்பச் சுமைகளை தமது தோள்களிலும் தாங்குவதில் ஆன்ம திருப்தி அடைகின்றோம்.

நீடித்துவரும் போரினால் காணாமல் போனவர்கள், அங்கவீனமாக்கப்பட்டவர்கள், அநாதைகளாக்கப்பட்டவர்கள், உறவுகளை இழந்தவர்கள், விதவைகளாக்கப்பட்டவர்கள், வீடுவாசல்களை இழந்தவர்கள், தொழில் இழந்தவர்கள் என்று நீண்டதொரு துன்பப்பட்டியல் நீண்டுசெல்கின்றது.

எம்மைச்சூழ வாழ்ந்து கொண்டிருக்கும் எம் உடன் பிறப்புக்களின் சோக வேதனைகளை எமது பல்கலைக்கழக மாணவ சமூகம் தமது பங்களிப்புக்களின் மூலம் தாமும் பகிர்ந்து கொள்ளமுன்வந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ''துயர் துடைப்பு நிதி'' யின் மூலம் மாணவர்கள் ஒவ்வொருவரும் மக்களின் துன்பங்களில் சிறிதளவாவது பங்கெடுத்துக் கொள்ள வழி ஏற்படுகின்றது.

வாரந்தோறும் பல்கலை மாணவர்கள் வழங்கும் சிறிய தொகைப் பணத்தின் மூலம் (10 ரூபா) ''துயர் துடைப்பு நிதி'' தனது இலக்குகளை இயன்றவரை எட்டமுடியும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீட மாணவர் ஒன்றியத்தின் மூலமாக இந்த நிதி சேகரிப்பு இடம்பெற ஆயத்தமாகியுள்ளது. ஒவ்வொரு பீட மாணவனும் வாரத்தின் ஒரு நாளில் ஒரு வேளை உணவை ஒறுத்து அதற்குச் செலவாகும் பணத்தை ''துயர்துடைப்பு நிதிக்கு'' வழங்குவதன் மூலம் துயர்படும் மக்களின் துன்பச் சுமைகளை ஒரு சிறிதளவாவது நீக்கி உதவ முடியும்.

''சிறுதுளி பெரு வெள்ளம்'' என்பதற்கிணங்க எம்மால் வழங்கப்படும் சிறிய தொகைப் பணத்தின் மூலம் துன்பப்படும் மக்களுடன் எம்மை இணைத்துக்கொள்ள முடியும்.

''காலத்தினால் செய்த உதவி சிறியதாயினும் அது ஞாலத்தின் மாணப்பெரிது'' என்பதற்கமைய பல்கலைக்கழகமாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட முழுப்பல்கலைக் சமூகமும் இந்த ''துயர்துடைப்பு நிதிக்கு'' உதவுவதன் மூலம் எமது உடன் பிறப்புக்களின் துன்பவடுக்களை சிறிதளவாவது களையமுடியும் என்றுள்ளது.

ஒவ்வொருபீட மாணவனும் தனது துயர் துடைப்பு நிதிக்குரிய பணத்தினை வாரந்தோறும் வழங்குவதற்கு வசதியாக அந்தந்தப் பீடங்களில் 'துயர்துடைப்பு நிதி' சேகரிப்புப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் பரீட்சை

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் இம் மாத இறுதியில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 20 ஆம் திகதி எனவும்—

22 வயதுக்குக் குறையாதவர்களும் வலைப்பந்தாட்டத்தில் அனுபவம், ஆர்வம் உள்ளவர்களும் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும்—யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் அறிவித்துள்ளது. (இ-7)

## சமய சந்நிதிகளில்

வேலணை கிழக்கு பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 16 ஆம்திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ-167)

★ ★ ★

சில்லாலை கதிரைமாதா ஆலயத்திருவிழா இன்று மாலை 5 மணிக்கு ஒப்புரவு வழிபாட்டுடன் ஆரம்பமாகி மூன்று நாள்கள் நடைபெறும்.

நாளை சனிக்கிழமைமாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7. 30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். (இ-7)

★ ★ ★

முளாய், ஒக. 13

காரைநகர் அழகாபுரி சோலை வைரவமுருகன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் திருவிழா இன்று வெள்ளி மாலை 2.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ஐ-99)

★ ★ ★

தென்மராட்சி, ஒக. 13

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

ஓகஸ்ட் 25ஆம்திகதி காலை தேர் உற்சவமும் மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ-117)

★ ★ ★

திருநெல்வேலி, ஒக. 13

கந்தாமடம் செல்வநாக பூஷணி அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. விசேட பூசை, அபிஷேகம் என்பன நடைபெற்று மாலை 5 மணிக்கு அம்பாள் வீதி உலா நடைபெறும். நண்பகல் அன்னதானம் [மகேஸ்வரபூசை] நடைபெறும். [ஐ-135]

★ ★ ★

வடமராட்சி, ஒக. 13

வியாபாரிமூலை இன்பர்சிட்டி ஸ்ரீசித்திவிநாயகர்ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். [173]

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயிலில் இன்று காலை 9 மணிக்கு ஆடிப்பூர உற்சவம் விசேட அபிஷேகம் பூசையுடன் இடம்பெறும். [30]

மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் — ஐயனார் ஆலயத்தில் இன்று காலை 9-30 மணிக்கு ஆடிப்பூரத் திருவிழா விசேட அபிஷேகம், பூசை ஆராதனையுடன் நடைபெறும். (30)

★ ★ ★

கோண்டாவில் அன்னங்கை ஸ்ரீமனோன்மணி அம்பிகா சமேத சிவபுரநாயகருக்கும் பரிவாரமூர்த்திகளுக்குமான நவகுண்டபக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 6.00 மணிக்கும் 7. 35 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்க கிரியைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும்.

23 ஆம்திகதிதிங்கட்கிழமை பகல் 10 மணிமுதல் மாலை 6.00 மணிவரை தைலாப்பியங்கம் (பக்தர்கள் எண்ணெய்க்காப்புச்சாத்துதல்) நடைபெறும்.

கும்பாபிஷேகத்தின்று யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயரின் ஆசியுரையும், நல்லைக்குருமணி திருஞானசம்பந்தசோமசுந்தரபரமாசாரிய சுவாமிகளின் அருளுரையும் யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் நா. வி.மு. நவரத்தினத்தின் சிறப்புரையும் இடம்பெறும்.

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்களுக்கு மண்டலாபிஷேகம் இடம்பெறும். (இ-152)

★ ★ ★

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அருள்மிகுஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூரத்தை முன்னிட்டு இன்று காலை அம்பாளுக்கு விசேட அபிஷேகம், திருமஞ்சன நீராடல் ஆகியன இடம்பெற்று காலை 9. 30 மணிக்கு ருது சாந்தி உற்சவம் நடைபெறும். (இ-30)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள்வரை நடைபெறவுள்ளது. அடுத்த மாதம் 2 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ-ரீ)

★ ★ ★

நாரந்தனை வடக்கு—பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் இடம்பெறவுள்ளது.

25 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ-ரீ)

## கிணறு வெட்ட வெளிவந்த மண்டை ஓடு

நெல்லியடி, ஒக. 13

வடமராட்சியிலுள்ள கோரியடி என்ற இடத்தில் வீட்டு வளவிலிருந்து புதையுண்ட நிலையில் மண்டை ஓடு ஒன்று மீட்கப்பட்டது.

வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க தலைவரின் வீட்டில் கிணறு புனரமைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களினால் இந்த மண்டை ஓடு கடந்த திங்கட்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.

அப்பகுதி கிராமசேவை அலுவலர் த. நந்தகுமாருக்கு இது தொடர்பாக முறையிடப்பட்டதையடுத்து அவர் நேற்று முன்தினம் காலை அந்த மண்டை ஓட்டை பார்வையிட்டதுடன் பருத் [illegible] திலும் முறைப்பாடு செய்தார். (இ-15-109)

## அறுவடை விழா

மக்கள் நலன்காக்கும் பிரிவினர் விவசாய திணைக்களத்தின் ஆலோசனையுடன் செய்கை பண்ணப்பட்ட மாதிரி விவசாய துண்டங்களின் அறுவடைவிழா இன்று காலை 8 மணிக்கு இருபாலை — கோண்டாவில் வீதியில் உள்ள விவசாய பண்ணையில் நடைபெறும். (இ-7)

## விடைத்தாள் மதிப்பீடு செய்வோருக்கு

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜி. சீ. ஈ. உயர்தரப்பரீட்சையின் முதற்கட்ட விடைத்தாள்களை மதிப்பிடும் மதிப்பீட்டாளர்களை கொழும்பு செல்வதற்குரிய பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக வேம்படி மகளிர் கல்லூரியில் இயங்கும் பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை கேட்டுள்ளார்.

இதேவேளை மேற்படி பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பிரதம, மேலதிக மதிப்பீட்டாளர்கள் நாளை காலை 8 மணிக்கு முன்பாக பிரயாண ஒழுங்குகளுடன் வேம்படி மகளிர் கல்லூரிக்குச் சமுகமளிக்க வேண்டுமெனவும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இறந்தவரை

# சேலை மற்றும் சட்டை மூலம் அடையாளம் காட்டினேன்

## வேலணைச் சம்பவத்தில் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஒக. 13

வேலணை சிற்பனைக் கிராமத்தில் கடந்த மாதம் 19ஆம் திகதி கிணறு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புகளும், எச்சங்களும் 1992ஆம் ஆண்டில் காணாமல் போன எனது சகோதரி திருமதி இந்திராணி ஜெபராசாவினுடையது என்பதனை யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சேலை மற்றும் சட்டையை வைத்து அடையாளம் காட்டினேன்.

வேலணையில் மனித எலும்பு மீட்கப்பட்டது தொடர்பான விசாரணையில் சாட்சியமளித்த தம்பையா பரமேஸ்வரி (வயது 68, வேலணை) என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் நேற்று இந்த விசாரணை நடைபெற்றது

இந்த விசாரணையின் போது அவர் மேலும் கூறியதாவது:-

காணாமல்போன ஜெ. இந்திராணி எனது ஒன்றுவிட்ட சகோதரியாவார். அவர் 1992 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதியிலிருந்து காணாமல் போனார். அன்று பல இடங்களிலும் தேடினோம். அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவர் வீட்டிலிருந்து புறப்பட்ட போது பச்சை நிற பூப்போட்ட சேலையும் சட்டையும் அணிந்திருந்தார். அவர் அணிந்திருந்த சேலையில் இலை வடிவிலான டிசைன் இருந்தது.

அவர் காணாமல் போன பொழுது அவருக்கு வயது நாற்பது அல்லது 45 இருக்கலாம் என்று நினைக்கின்றேன். அவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர்.

நான்காவது குழந்தை பிறந்த பின்னர் கணவர் அவரை விட்டுப் பிரிந்து விட்டார். இதனால் அவர் மனவளம் குன்றிய நிலையிலிருந்தார்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட தடயப் பொருள்களை சட்ட வைத்திய அதிகாரி ஸ்ரீ. ராஜேஸ்வரன் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

வேலணை தெற்கு கிராம சேவையாளர் ஆறுமுகம் சபாநாதன், க. பரமநாதன் ஆகியோரும் இந்த விசாரணையில் சாட்சியமளித்தனர்.

சாட்சிகள் பதிவு செய்யப்பட்ட பின்னர் இது தொடர்பான விசாரணை எதிர்வரும் செப்ரெம்பர் 3 ஆம் திகதிக்கு மேலதிக நீதிவான் ஒத்திவைத்தார் (இ-ரி-5)

## குளம் புனரமைப்பு

முளாய், ஒக. 13

அராலி வடக்குப் பகுதியில் உள்ள கொட்டணைக்குளம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுவரும் இப் புனரமைப்பு வேலைகளை இப் பகுதியின் விவசாய சம்மேளனத்துடன் இணைந்து கிராம உத்தியோகத்தர் எஸ். குலசேகரம் மேற்கொண்டு வருகிறார்.

இக் குளத்தின் திருத்த வேலைகளுக்கான நிதியை 'கெயர்' நிறுவனம் வழங்கியுள்ளது. (ஐ-99)

## மதுபோதையில் பவுஸர் செலுத்தினாராம்

யாழ்ப்பாணம், ஒக. 13

மது போதையில் பவுஸர் செலுத்தி இருவருக்கு காயம் விளைவித்ததாக கூறப்படும் சம்பவத்தில் சந்தேக நபரான பவுஸர் சாரதியை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த விபத்துச் சம்பவத்தை தொடர்ந்து யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பவுஸர் சாரதி நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

அவர் செலுத்தி வந்த பவுஸரும் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெதடிஸ்த முகாமைக் குருவுக்கு பிரியாவிடை

யாழ். மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குருவும் சென். பீற்றர்ஸ் மெதடிஸ்த திருச்சபை, வண்ணார் பண்ணை மெதடிஸ்த திருச்சபை ஆகியவற்றின் குருவானவருமான வண. எஸ். எஸ். ரெரன்ஸ் அவர்களுக்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு பிரியாவிடை வைபவம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

சேகர ரீதியாக நடைபெறும் இந்த வைபவம் யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெறும்.

வண. எஸ். எஸ். ரெரன்ஸ் அவர்கள் முகாமைக் குருவாக திருகோணமலைக்கு இடமாற்றம் பெற்றுச்செல்வதை முன்னிட்டு இந்த வைபவம் ஏற்பாடாகி உள்ளது. (இ)

## புராதன......

[மூன்றாம் பக்கத் தொடர்]

சிரியா ஆகிய நாடுகளில் இருந்து வந்த விண்ணியலாளர்கள் முகாமிட்டிருந்த பகுதியும் தாக்கப்பட்டதாகவும் இதில் பலர் கொல்லப்பட்டதுடன் பலர்காயமடைந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. ஈராக்கின் புராதன சின்னம் தாக்கப்பட்டது குறித்து அமெரிக்க பாதுகாப்பமைச்சு எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

வடஈராக் மீது தாக்குதல் நடத்திய பின்னர் அந்த விமானங்கள் துருக்கியிலுள்ள தமது தளங்களுக்கு திரும்பிச் சென்றதாக அமெரிக்க — பிரிட்டிஷ் படையினர் கூறினர். [ஐ-ரி]


எமது ஒறிஜினல் வீடியோ CD வெளியீடு!

குணால் — சோனாலி நடித்த

காதலர் தினம் ( Full Screen )

எமது அடுத்த வெளியீடுகள்!

முரளி — சிம்ரான் நடித்த

கனவே கலையாதே

சத்தியராஜ் — குஷ்பு நடித்த

மலபார் போலீஸ்

சூரியா — ஜோதிகா நடித்த

பூவெல்லாம் கேட்டுப்பார்

சுப்பஸோ வீடியோ

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/8504)


# இரு பிரிவுகளில் முதல்கட்ட கொடுப்பனவு நாளை வழங்கப்படும்

தென்மராட்சி, ஒக.13

தேர்தல் தொகுதிகள் தோறும் 100 வீடுகள் அமைக்கும் 'ஜன உதான' வீடமைப்புத் திட்டத்தின்கீழ் பளை பிரதேசத்தில் சோரன்பற்று, தம்பகாமம் ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கு வீடுகளை அமைப்பதற்காகத் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் முதலாம் கட்டக் கொடுப்பனவும்—

பிரதேசத்தில் 50 ஆயிரம் ரூபா வீடமைப்புக்கடனுக்குத் தெரிவு செய்யப்பட்ட 35 பேரில் முப்பது பயனாளிகளுக்குத் தலா 10 ஆயிரம் வீதம் முதல் கட்டக் கொடுப்பனவும் —நாளை சனிக்கிழமைகாலை 9 மணிக்குப் பளைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும் வைபவத்தில் வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் பயனாளிகளுக்கு உரிய கொடுப்பனவுகளை வழங்குவார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் பிரதேசத்தில் வன்செயல்களின் போது வீடுகளை இழந்த ரூபா ஆயிரத்து 500க்கு மேற்பட்ட வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 35 பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவைக் கடனாகவும் இந்தக் கடனை ஆறுசதவீத வட்டியுடன் 120 மாதங்களில் (பத்து வருடங்கள்) செலுத்தவேண்டுமெனவும்—

ரூபா ஆயிரத்து 500க்கு உட்பட்ட வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 100 பயனாளிகளுக்குதலா 20 ஆயிரம் ரூபா கடனாகவும் 10 ஆயிரம் ரூபா மானியமாகவும் வழங்கவுள்ளதாகவும் தெரிவிகப்பட்டது.

இக்கடன் பத்துவீத வட்டியுடன் 120 மாதங்களில் (பத்து வருடங்கள்) செலுத்தப்படல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட புலோப்பளை, தர்மக்கேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 50 பயனாளிகளுக்கு கடந்த வாரம் 5 ஆயிரம் வீதம் முதலாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-117)

## கிழக்கில் ...

[முதலாம் பக்கத் தொடர்]

பட்ட தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து தினமும் விடுதலைப் புலிகள் படையினர் மீது தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றனர்.

இந்தத் தாக்குதல் எச்சரிக்கையை அடுத்து கிழக்கில் விடுதலைப் புலிகள் வசம் உள்ள பகுதிகளை கைப்பற்றும் நோக்கில் படையினர் பெரும் நடவடிக்கை ஒன்றை எந்த நேரத்திலும் ஆரம்பிக்க வசதியாகத் தயார் நிலையில் உள்ளதாக கொழும்பு இராணுவ விமர்சகர்கள் தெரிவித்தனர்.

கடந்த 9 ஆம் திகதி விடுதலைப் புலிகள் தற்கொலைத் தாக்குதல் மேற்கொண்ட வாகரை இராணுவ முகாம் பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன் அங்கு துருப்புக்கள் கொண்டு போய் குவிக்கப்படுகின்றனர்.

வன்னியில் இராணுவ நடவடிக்கை கடந்த ஒருவருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சமயம் மட்டக்களப்பில் பல முகாம்கள் மூடப்பட் படையினர் வன்னிப் பகுதிக்கு அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே நேரம — திருகோணமலை மாவட்டத்திலும் நகருக்குள் புலிகள் ஊடுருவியிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து அங்கும்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் தீவிர சோதனைகளும் இடம்பெறுகின்றன.

படையினர் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்க முஸ்தீவு நடவடிக்கையில் ஈடுபட அதை முறியடிக்கும் விதத்தில் புலிகள் தமது தாக்குதல்களைத் தீவிரமாக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. (இ-3)

# மின் தடை

யாழ்ப்பாணம், ஒக. 13

வடமராட்சிப் பகுதியில் 24 மணி நேரம் மின் சேவையுள்ள சில பகுதிகளில் இரவு நேரங்களில் மின்சாரம் தடைப்படுகிறது.

பகல் வேளையில் இப்பகுதிகளில் மின் விநியோகம் இருந்தபோதிலும் இரவு ஆனதும் மாலை 6-30 மணியுடன் மின்சார விநியோகம் தடைப்பட்டு விடுகிறது. (இ-15)

## பயணிகள்...

[முதலாம் பக்கத் தொடர்]

பெரும்பாலும் இந்தக் கப்பல் எதிர்வரும் ஜனவரியில் தனது பயணத்தை ஆரம்பிக்கும் என்றும்—தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## லிப்டன்...

(முதலாம் பக்கத் தொடர்)

மணிமுதல் 1-30 மணி வரை ஆர்ப்பாட்டம் நடத்தின.

அதேசமயம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசும் —ஐ. தே. கவும் ஒரே மேடையில் விவாதித்து பொது உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்றுகோரி காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கம் உட்பட 15 நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் மகாவலி கேந்திர நிலையத்தில் இருந்து ஊர்வலமாக வந்து லிப்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த இரு ஆர்ப்பாட்டங்களிலும் அமைச்சர்களான மங்கள சமரவீர, அலவி மௌலானா, அத்தாவுட செனவிரத்தின மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் பங்கு பற்றினர் (இ-3)

## ஹெல்மெட் ...

(முதலாம் பக்கத் தொடர்)

மூடி 'வைஸர்' அணியக் கூடாது.

மேற்கண்டவாறு பலாலிப் படைத் தரப்பினர் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

''மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வோர் தலைக் கவசம் அணிய வேண்டாம் என்று படையினர் அறிவுறுத்து'' என்ற தலைப்பில் கடந்த 22 ஆம் திகதி உதயனில் வெளியான செய்தி தொடர்பாகவே படைத்தரப்பினர் மேற்கண்ட அறிவுறுத்தலை விடுத்துள்ளனர்.

ஹெல்மட் அணியக்கூடாது என்று எவருக்கும் உத்தரவிடவில்லை என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

# நலன்புரி நிலையங்களை மன்னாரில் மூடுவதற்கு முடிவு

## அகதிகள் வவுனியாவுக்கு

மன்னார் மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களை வவுனியாவுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னாரிலும், வவுனியாவிலும் நலன்புரி நிலையங்களை நடத்துவதால் ஏற்படும் வீணான செலவீனம் மற்றும் பாதுகாப்பு நெருக்கடி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மன்னாரிலுள்ள நலன்புரி நிலையங்களை மூட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த முகாம்களில் தங்கியுள்ள அகதிகளை அழைத்து வந்து வவுனியாவில் தங்க வைக்க ஏற்பாடாகியுள்ளது.

இதற்காக சிதம்பரபுரத்தில் ஆயிரம் குடிசைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (இ-3)

# செல்லச்சந்நிதி உற்சவம் நேற்றுக் காலை ஆரம்பம்

பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்லச் சந்நிதி கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்றுக் காலை 7-35 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்ற உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

மஹோற்சவத்தை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போ தொண்டமானாறு ஊடாக நடத்திவரும் வழமையான பஸ்சேவைகளுடன், பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை, நெல்லியடி ஊடாக நடைபெற்றுவரும் பஸ்சேவைகளில் சிலவும் நேற்று முதல் தொண்டமானாறு ஊடாக நடைபெற்று வருகின்றன.

இதேவேளை, வடமராட்சி தவிர்ந்த ஏனைய இடங்களிலிருந்து சந்நிதிக்குவரும்பக்தர்களுக்கென வல்லையில் இரு விசேட சோதனை பாஸ் வழங்கும்சாவடிகள் படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேநேரம்—

தொண்டமானாறு செல்லச்சந்நிதி கோவில் வருடாந்த உற்சவம் ஆரம்பமானதை அடுத்து ஆலயத்துக்கு செல்லும் பக்தர்களின் வசதி கருதி வல்லை வீதித்தடைப் பரிசோதனை நிலையக்கடமைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

திருவிழாவுக்கு செல்லும் வலிகாமம் பகுதி பக்தர்களின் பயணத்தில் காலதபமதத்தை விர்க்கும் பொருட்டு பரிசோதனைச்சாவடிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. ஆண்கள் பெண்களுக்குவேறு வேறாக இரண்டு பரிசோதனைக் கூடங்கள் புதிதாக அமைக்கப்பட்டுபரிசோதனைகள் இலகுபடுத்தப்பட்டுள்ளது.

நேற்றைய கொடியேற்றத் திருவிழாவுக்கு ஏராளமான பக்தர்கள் வலிகாமம் பிரிவில் இருந்துசென்று வந்தனர். (இ-15-173)

## தொண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்)

642பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை வலயப்பணிப் பாளர்களுக்கு நேற்று முன் தினம் அனுப்பியிருந்தது.

அந்தப்பட்டியலைப் பணிப்பாளர்கள் தமது அலுவலகங்களில் உள்ள விளம்பரப் பலகையில் காலையிலேயே விளம்பரப்படுத்தியிருந்தனர்.

மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளர் இது தொடர்பான பணிகளை இடைநிறுத்துமாறு அறிவித்ததைஅடுத்து அந்தப்பட்டியல்கள் அகற்றப்பட்டன.

கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்ட பட்டியல்களில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் குளறுபடிகள், முறைகேடுகள் தொடர்பாக யாழ். படைத்தரப்பு நேற்று ஆராய்ந்ததாகத் தெரிய வந்தது.

அதே நேரம் — இந்த நேர்முகப் பரீட்சை இடை நிறுத்தப்பட்டமைக்கான காரணம் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளருடன் நேற்றுப் பேசியதாகவும்—

நீதியான முறையில் இந்த விடயம் கையாளப்படுவதற்காகவே இடை நிறுத்தப்பட்டது என அவர் பதில் அளித்ததாகவும்— தமிழர் ஆசிரியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே சமயம் — தற்சமயம் அனுப்பப்பட்டுள்ள பட்டியலுக்கும் தமது சங்கம் சமர்ப்பித்த பட்டியலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும்—

சங்கத்தில் பதிவு செய்த ஆசிரியர்கள் இந்தப் பட்டியலின் விவரத்தையிட்டுக் குழப்பம் அடைய வேண்டாம் என்றும் — யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (இ-3)

# கைது

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் என்ற போர்வையில் 20 கிலோ நிறையுடைய ''போல் பெயாரிங்கை'' யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப முயன்றதாகக் கூறப்படும் கோடீஸ்வரரான தமிழ் வர்த்தகர் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாகக் கொழும்புப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மேற்படி வர்த்தகர் மூன்று வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வந்தவர் என விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாகவும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7-8)

## லயன் ...

[முதலாம் பக்கத் தொடர்]

அப்போது தடயப்பொருள்களை அங்கு வைப்பது நல்லது என்றும்—நீதிவான் தெரிவித்தார்.

இந்த விபத்துத் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் பொலீஸ் குழுவும் அச்சமயம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும். (இ-3)


றொக்லண்ட் மதுபான வகைகளுக்கு

இன்றே நாடுங்கள்

வாமாஸ்

121/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே. இல. 2989

[68169]



அதிசயிக்கத்தக்க பலன்களை அள்ளித்தர வல்லது

அபூர்வ ஜோதிட நிலையம்

ஆலடிச் சந்தி,

UP 304, பலாலி வீதி,

யாழ். நகர்.

(68174)


இப பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-08-99 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org